பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள்

(ஒரு தியான நூல்)

எஸ். தாயப்பன் (பாகம்-2)

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர்
காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம்
அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை
உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது;
அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்."

-ஏசாயா 53:5

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள்

(ஒரு தியான நூல்)

பாகம் - 2

எஸ். தாயப்பன்

நன்கொடை - ரூ.10/-

பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம்-2)
முதற்பதிப்பு மார்ச் 2014, 5000 பிரதிகள்

ஆசிரியரின் பிற நூல்கள் :

1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	(தமிழ்)	- 2,75,000 பிரதிகள்
2.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	(கன்னடம்)	- 40,000 பிரதிகள்
3.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	(மலையாளம்)	- 30,000 பிரதிகள்
4.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	(தெலுங்கு)	- 10,000 பிரதிகள்
5.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	(ஹிந்தி)	10,000 பிரதிகள்
6.	My Cry & Joyful New Lift (English)		- 45,000 பிரதிகள்
7.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	(தமிழ்)	- 95,000 பிரதிகள்
8.	பாவத்தின் சம்பளம் நரகம்		- 80,000 பிரதிகள்
9.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்		- 40,000 பிரதிகள்
10.	கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில்		- 20,000 பிரதிகள்
11.	என் ஊழியக்காரனே ?		- 20,000 பிரதிகள்
12.	இந்தியாவுக்கு இயேசு தேவை. ஏன் ?		- 40,000 பிரதிகள்
13.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!		- 20,000 பிரதிகள்
14.	நீங்களே எனக்கு சாட்சிகள்		- 15,000 பிரதிகள்
15.	உண்மையான கடவுள் யார் ?		- 10,000 பிரதிகள்
16.	அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு		- 15,000 பிரதிகள்
17.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாக பரவவில்லை?		- 10,000 பிரதிகள்
18.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு பாகம் - 1		- 5,000 பிரதிகள்
19.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு பாகம் - 2		- 5,000 பிரதிகள்
20.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் பாகம் - 1		- 5,000 பிரதிகள்
21.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் பாகம் - 2		5,000 பிரதிகள்
22.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு ?		5,000 பிரதிகள்
23.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்திடாக்டர் கிறிஸ்டோபர்		5,000 பிரதிகள்
24.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு டாக்டர் சுந்தர் ஏசுவடியான்		3,000 பிரதிகள்
25.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம்-1)		5,000 பிரதிகள்
26.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம்-2)		5,000 பிரதிகள்

சீடிக்கள்

1.	V.C.D. என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும்	(தமிழ்)	- 2,65,000 சீடிக்கள்
2.	V.C.D. என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும்	(கன்னடம்)	- 30,000 சீடிக்கள்
3.	V.C.D. என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும்	(ஹிந்தி)	- 15,000 சீடிக்கள்
4.	V.C.D. எழுந்து கட்டுவோம்	(தமிழ்)	- 13,000 சீடிக்கள்
5.	V.C.D. முக்திக்கு வழி கிறிஸ்துவமே	(தமிழ்)	- 7,000 சீடிக்கள்
6.	V.C.D. கதாகாலட்சேபம்	(தமிழ்)	- 7,000 சீடிக்கள்

இந்த நூல்கள், மற்றும் வி.சி.டி. கிடைக்கும் முகவரி:

எஸ். தாயப்பன்
12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ - 1
சேலையூர் போஸ்ட், சென்னை - 600 073
தொலைபேசி: 044-2234526, மின்அஞ்சல்: sakthiprabba@yahoo.com

நூலை அனுப்ப சில விதிகள்:

ஒவ்வொரு நூலுக்கும், **வி.சி.டி.**க்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ:1/-.

MO, DD அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை **MO** பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். **செக் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.** **MO, DD** பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

வி.சி.டி. அனுப்ப தபால் செலவு மட்டும் :-

1 முதல் 15 **வி.சி.டி.** அனுப்ப ரூ.20/-
16 முதல் 25 **வி.சி.டி.** அனுப்ப ரூ.35/-
100 வி.சி.டி.க்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் **கே.பி.என்.பார்சல் சர்வீஸ்** மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேரில் வர:

நேரில் நூல்களை பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து M.சீரிஸ் மற்றும் வெள்ளைபோர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். அல்லது ஷேர் ஆட்டோவில் ரூ.10/- கொடுத்தால் மஹாலட்சுமி நகர் பஸ் ஸ்டாப்பில் இறக்கிவிடுவான். இடது புறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலது புறம் K.K. மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலது புற ஜி.டி.நாயுடு தெருவில், இடது புறத்தில் இரண்டாவது வீடு.

ஒரு வேண்டுகோள்

உங்களுக்கு என்ன புத்தகம் எவ்வளவு வேண்டும் என MO படிவத்தில் அல்லது EMO-வில் அல்லது கடிதத்தில் எழுதாத பட்சத்தில் எல்லா புத்தகங்களையும் நீங்கள் அனுப்பிய MO-க்கு தகுந்தாற்போல் அனுப்ப வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்படுகிறது. இவைகளை தவிர்க்க உங்களுக்கு என்ன புத்தகம் தேவை என்று தெளிவாக எழுதி அனுப்புங்கள். உங்கள் டெலிபோன் / செல் நம்பர்களையும் தவறாமல் எழுதி

Other Sheep.... not of this fold, them also I must bring, they shall hear my voice and there shall be one fold and one shepherd. John 10 : 16

EVANGELICAL CHURCH OF INDIA

பேராயர் எஸ்றா சற்குணம்
Most Rev. Dr. M. EZRA SARGUNAM
Bishop - President, ECI ALL INDIA CONFERENCE

பேராயரின் அணிந்துரை



சகோதரர் தாயப்பன் அவர்களின் 'பாவப் பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள்' என்ற நூல் கிறிஸ்தவர்களின் பக்தி விருத்திக்கு பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. நூலாசிரியர் தனது உரையில் கூறியிருப்பது போல் சாமுவேல் பவுல் ஐயரவர்களின் 'ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்' என்ற நூலினை அடிப்படையாகக் கொண்டு இரண்டு பாகங்களில் இவர் தமது நூலை உருவாக்கியிருக்கிறார். வாசகர்கள் படித்து பெரிதும் பயனடைவார்கள் என நம்புகிறேன்.

திரு. தாயப்பன் அவர்கள் பரம்பரைக் கிறிஸ்தவராக இல்லாமல் இருப்பது அவருக்கு ஒரு 'பிளஸ் பாயிண்ட்' என்று கருதுகிறேன். கிறிஸ்துவின் மீட்கப்பட்ட சரீரத்தின் மகிமையை அறிந்து சிந்தப்பட்ட இரத்தத்தின் மேன்மையையும் உணர்ந்தவராய் தனது மீட்பருக்காக வாழ்ந்து, அவருடைய அங்க மகத்துவங்களை அனுதினமும் ருசிப்பவராக இருப்பதால், இந்த அருமையான தியானங்களை பொறுமையாக எழுதி நம்மை தேவ கிருபையில் நிலை நிற்க அழைக்கிறார்.

மேலும் தாயப்பன் அவர்கள் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவராக மட்டும் கிறிஸ்துவின் பாடுகளை தியானிக்காமல் பழைய ஏற்பாட்டிலும் கிறிஸ்துவின் அங்க மகத்துவங்களை காண முயன்றிருக்கிறார். தேவன் தனக்கென்று மனிதனை உருவாக்கி, அதில் ஆபிரகாமின் சந்ததியான இஸ்ரவேலை தமது சேஷ்ட புத்திரனாய் தேர்ந்தெடுத்து, யூதர்கள் மூலமாய் இரட்சிப்பை உலகுக்கு அளிக்க எண்ணினார். (யோவான் 4:22) இந்த சத்தியத்தின் அடிப்படையில் தாயப்பன் அவர்கள் சங்கீதங் களிலும், தீர்க்கதரிசிகளின் புத்தகங்களிலும் மேசியாவைக் குறித்த வசனங்களைப் படித்து தியானித்து பழைய ஏற்பாட்டிலும் ஆத்தும நேசரின் அங்க மகத்துவங்களை நம்மையும் தியானிக்கச் செய்கிறார். எடுத்துக்காட்டாக இயேசு கிறிஸ்துவின் முதுகு பட்ட பாடுகளை சங்கீதம் 129:3 ஐயும், ஏசாயா 50:6 ஐயும் மேற்கோள்காட்டி நம்மை தியானிக்கச் செய்கிறார்.

எனவே வாசகர்கள் இத்தியான நூலை லெந்து காலங்களில் மட்டுமல்லாமல், தினமும் தியானித்து தங்கள் இரட்சக பெருமான் இயேசுபிரானுக்காகவும் அவருடைய திருமந்தைக்காக வும், தங்களை அர்ப்பணித்து திருமந்தையில் சேரா ஆடுகளைத் தேடி அலையும் அருட்பணி ஊழியங்களையும் தாங்க முன்வர வேண்டும். 'உனக்காக நான் மரித்தேனே, எனக்காக நீ என்ன செய்தாய்?' என்று கேட்கும் இயேசுவின் இதய ஏக்கம் இத்தியானங்கள் மூலம் நம்மை அவருக்காக வாழ்ந்து மடியச் செய்யட்டும் எனக் கூறி எனது அணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

சென்னை - 600 010
மார்ச் 10, 2014

எஸ்றா சற்குணம்
பிரதமப் பேராயர் - இசிஜ

Administrative Office : No. 1, 2nd Street, Ormes Road, Kilpauk, Chennai - 600 010. India.
Phone : (91-44) 26413178, 26427574, 26428955 - Fax : 26411803.
E-mail : bishopsargunam.eci@gmail.com, ecindia@vsnl.com

பொருளடக்கம்

14. கைவிடாத கர்த்தரின் கனிவான கரம் - பாகம் 4 9

15. ஆபத்பாந்தவரின் அரவணைக்கும் கை - பாகம் 5 13

16. செங்கோலைப் பிடித்த கையில் செங்குருதி வழிந்தது - பாகம் 6 18

17. அதிசயம் செய்யும் அற்புத விரல்கள் 23

18. கர்த்தாதி கர்த்தரின் காதும், கன்னமும் 27

19. வாய்மையே பேசிய வல்ல தேவனின் வாய் 32

20. உன்னதமானவரின் உமிழ்நீர் 35

21. கர்த்தாதி கர்த்தரின் கனிவான கண்கள் - பாகம் 1 38

22. கர்த்தாதி கர்த்தரின் கனிவான கண்கள் - பாகம் 2 43

23. திரியேக தேவனின் திவ்ய திருமுகம் - பாகம் 1 48

24. திரியேக தேவனின் திவ்ய திருமுகம் - பாகம் 2 51

25. சீர்மிகு தேவனின் சிறப்புமிகு சிரசு - பாகம் 1 54

26. சீர்மிகு தேவனின் சிறப்புமிகு சிரசு - பாகம் 2 57

27. சிலுவை சுமந்த சிறப்புமிகு தேவனின் சீர்மிகு சிரசு - பாகம் 3 60

*

என்னுரை

கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஒரு மிகப் பழைய புத்தகம் ஒன்று என் கையில் கிடைத்தது. அது 1882ல் வெளியான ஒரு நூல். அதன் தலைப்பு என்னை ஈர்த்தது. 'ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்' ராவ் சாஹிப் சாமுவேல் பவுல் ஐயரவர்களால் எழுதி வெளியிடப்பட்ட ஒரு நூல். இந்த அருமையான நூலை CLS 1998 வரை 14 பதிப்புகள் வெளியிட்டு இருக்கின்றனர் என்பதே இப்புத்தகத்தின் சிறப்பிற்கு சான்று கூறும். ஒரு சில பக்கங்கள்தான் முதலில் படித்தேன். என்னால் கீழே வைக்க முடியவில்லை. நமக்காக, நம் பாவங்களுக்காக மரித்த இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு அங்கங்களையும் தியானித்து மிக அருமையாக அதில் எழுதப்பட்டு இருந்தது. அந்தக் காலத்து தமிழ் நடை. இருந்தாலும் அதில் ஐயரவர்கள் எவ்வளவு ஆழமாக, பக்தியாய், நமக்காகப் பாடுபட்டு சித்திரவதைகளை அனுபவித்த ஒவ்வொரு அங்கமாய் தியானித்து அவர் எழுதியிருந்த விதம் என் கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

இந்த நூலை எழுதிய ஐயரவர்கள் 1844ல் மெய்ஞான புரத்திற்கு அருகில் உள்ள பாட்டக்கரை என்னும் கிராமத்தில் பிறந்து மலை ஊழியம் (1874 - 1883), சென்னை (1883 - 87), சாட்சியாபுரம் (1887 - 1990) திருச்சபைகளில் ஊழியம் செய்தார். இவரின் உன்னதமான பணியைப் போற்றி இந்தியாவில் கவர்னர் ஜெனரல் இவருக்கு 1898ல் ராவ் சாஹிப் என்ற பட்டம் கொடுத்து கனப்படுத்தினார். இந்தியாவில் இந்தக் கவுரவத்தைப் பெற்றுக் கொண்ட முதலாவது சுதேச குரு இவரே. 1890 முதல் நற்போதகம் என்கிற ஒரு மாதாந்திர தமிழ் பத்திரிகையையும் நடத்தி வந்தார். 16 புத்தகங்களையும் எழுதியிருக்கிறார். பல பிற மொழிப் புத்தகங்களையும் மொழிபெயர்த்து வெளியிட்டு இருக்கிறார். 1900 ஆம் ஆண்டு அவர் மரித்திருந்தாலும் அவர் எழுதிய புத்தகம் இன்றும் நம்மோடு பேசிக் கொண்டிருக்கிறது.

அந்தப் புத்தகத்தை வைத்து இருந்தவரிடம் அந்த நூலை தயவாய்க் கேட்டு வாங்கி அதை முழுவதுமாய் படித்து முடித்தேன். நம் ஆத்தும நேசரின் ஒவ்வொரு அங்க மகத்துவமும் அதில் பளிச்சென்று எனக்கு விளங்கியது. என் தியானத்திற்கு அந்த நூல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அதிலுள்ள பல வாசகங்கள், வசனங்கள், அதைக் குறித்த தியானம், ஜெபம் என்னை விட்டு அகலவே இல்லை. என் உள்ளத்தில் அவைகள் நீண்ட நாட்கள் ரீங்காரம் செய்து கொண்டே இருந்தன. என் தனிப்பட்ட ஆவிக்குரிய ஜீவியத்தில் நான் வளர, அவர் பெருக, நான் சிறுக அன்று நான் வாசித்த புத்தகம் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது. என்னை புடமிட்ட புத்தகங்களில் இதுவும் ஒன்று. இப்பேர்ப்பட்ட நல்ல புத்தகங்களைத் தேடிப் பிடித்து புதுப்பித்து வெளியிட்டமைக்காக **CLS** ஐ நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்த நூல் என் உள்ளத்தில், சிந்தனைகளில் ஏற்படுத்திய தாக்கத்தை நான் அனைவரோடும் பகிர்ந்து கொள்ள வாஞ்சித்தேன். அதன் விளைவே இந்தப் புத்தகம். கர்த்தருடைய அங்க மகத்துவம் நம்மைப் பண்படுத்துவதாக, நம்முடைய தியானத்திற்கு, ஜெபத்திற்கு இந்த தியான நூல் மிகவும் உறுதுணையாக இருக்க தேவன் இதை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில் உங்கள் சகோதரன்

எஸ். தாயப்பன்

சென்னை - 73
05.03.2014

தியானம் - 14

கைவிடாத கர்த்தரின் கனிவான கரம்
(பாகம் 4)

நாம் தேவனுடைய பலத்த கரத்திற்குள் இருந்தால் நாம் பலத்த கோட்டைக்குள், அவரின் செட்டைகளின் கீழ் என்றென்றைக்கும் பாதுகாப்பாய் இருப்போம். எந்த அந்தகார சக்தியும், அதன் வல்லமையும் நம்மைத் தொடாது என்று நம் ஆண்டவர் நமக்கு உறுதிமொழி அளிக்கிறார். **'என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது.நான் அவைகளுக்கு நித்ய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதில்லை'** என ஆண்டவர் யோ 10:27, 28ல் கூறுகின்றார். இதற்கு நாம் செய்ய வேண்டிய தெல்லாம் என்ன? அவருடைய சத்தத்திற்கு நாம் செவி கொடுக்கணும். அவருடைய சத்தத்திற்கு மாத்திரம் செவி கொடுக்கணும். வேறு எந்த சத்தத்திற்கும் அல்ல.

அப்படி அனுதினமும் நாம் அவரின் சத்தத்திற்கு செவி கொடுக்கணும். நாம் ஜெபம் செய்தால் நாம் ஆண்டவரோடு பேசுகிறோம். வேதத்தை வாசித்தால் ஆண்டவர் நம்மோடு பேசுகிறார். அவர் சத்தத்தை நாம் கேட்கிறோம். அவரின் மெல்லிய சத்தத்தை நாம் தினமும் கேட்டு, ஒவ்வொரு காரியத்தையும் செய்வதற்கு முன்பாக அவரின் சித்தத்தை அறிந்து, சத்தத்தைக் கேட்டு அதன்படி நாம் செய்யணும்.அப்போ நாம நித்ய ஜீவனைப் பெற்றுக் கொள்வோம். சத்துரு நம்மை எந்த ஒரு கெட்ட காரியங்கள், சிந்தனைகள், எண்ணங்கள், செயல்களுக்கு நம்மை இழுத்துக் கொள்ள முடியாதபடி அவரின் பலத்த கரத்திற்குள் நாம் பத்திரமாய் பாதுகாப்பாய் இருப்போம்.

பரிசுத்த வேதாகமம் ஆண்டவர் நமக்கு கொடுத்துள்ள மிகப் பெரிய பொக்கிஷம். இந்த உலகம் அழிந்து போகலாம். ஆனால்

தேவனுடைய வார்த்தைகள் ஒருபோதும் அழியாது. அது என்றென்றும் நிலைத்திருக்கும். ஆண்டவர் நமக்கு கொடுத்துள்ள இந்த வார்த்தைகள் நம்மைப் பண்படுத்தும், பக்குவப்படுத்தும், புடமிடும், பரிசுத்தப்படுத்தும், நாம் நடக்க வேண்டிய வழிகளைப் போதிக்கும். நமது வாழ்க்கைக்கு ஒரு ஒளி விளக்காக இருக்கும். நம்மை பாவம் செய்ய விடாமல் தடுக்கும், நம்மை எச்சரிக்கும். வேதம் கூறுகிறதே - **'எனக்கு செவி கொடுக்கிறவன் எவனோ அவன் விக்கினமின்றி வாசம் பண்ணி ஆபத்துக்குப் பயப்படாமல் அமைதியாக இருப்பான்'** என்று (நீதி 1:33).

'இயேசு ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீடருடைய கால்களைக் கழுவவும் தொடங்கினார்' என்று யோ 13:5 கூறுகிறது. இயேசு தமது திருக்கரத்தால் அவரின் சீஷரின் கால்களைக் கழுவி, தமது திருக்கரத்தால் துடைக்கவும் செய்தார் என்று பார்க்கிறோம். நாம் இயேசு கிறிஸ்துவினுடைய சீஷர்களாக ஆகும் போது அவர் தமது இரத்தத்தால் நமது பாவங்களைக் கழுவுகிறார். பாவமதை துப்புரவாகத் துடைத்து நம்மை தூய்மைப்படுத்துகிறார். நமக்கும் பரம பிதாவிற்கும் இடையே இருந்த இடைவெளியை அறவே நீக்கி அப்பா, பிதாவே என்று அவரை அழைக்கின்ற புத்திர சுவீகாரத்தையும் நமக்குத் தருகிறார். **'நான் பரிசுத்தர், நீங்களும் பரிசுத்தராய் இருங்கள். நான் உங்களை பரிசுத்தத்திற்கென்று அழைத்திருக்கிறேன். பரிசுத்த அலங்காரத்துடனே என்னைத் தொழுது கொள்ளுங்கள். பரிசுத்தமில்லாமல் தேவனை தரிசிப்பது கூடாத காரியம்'** என்று தேவன் நம்மை பரிசுத்தத்திற்கென்றே அழைத்திருக்கிறார்.நம்மைப் பரிசுத்தப்படுத்துகின்ற தேவனாக கிறிஸ்து இருக்கிறார்.

'ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனின் வலது காதை வெட்டினான். அப்பொழுது இயேசு, அவனுடைய காதைத் தொட்டு அவனை சொஸ்தப்படுத்தினார்' என்று லூக்கா 22:50, 51ல் பார்க்கிறோம். தேவன் தொட்டாலே போதும். அற்புத சுகம் கிடைக்கும். எப்பேர்ப்பட்ட நோயும் குணமாகும். உலர்ந்த எலும்புகள் உயிரடையும். குஷ்ட ரோகத்தினால், கொடிய கேன்சரினால் வெட்டி எறிய வேண்டிய உடல் உறுப்புகளையும் ஆண்டவர் தொட்டு சுகப்படுத்தி அதை வெட்டி விடாமலே

சுகப்படுத்துவார். ஒரு ஆக்ஸிடெண்டில் கை கால் இழந்து முடமாக இருந்தாலும், ஆண்டவர் உங்களை எந்தக் குறையும் இல்லாது பார்த்துக் கொள்வார். கைகால்கள் இருப்பவர்களை விட உங்களை சந்தோஷமாக வைப்பார். சமாதானமாக வைப்பார். **'உலகம் கொடுக்கிற சமாதானமல்ல, என்னுடைய சமாதானத்தையே நான் உங்களுக்குத் தருகிறேன்'** என்று சொன்ன தேவன், அப்பேர்ப்பட்ட ஒரு தெய்வீக சமாதானத்தையே உங்களுக்குத் தருவார்.

கிறிஸ்துவினுடைய கரத்தில் சகல வல்லமையும் இருக்கிறது. அவருடைய பலத்த கரத்திற்குள் நாம் அடங்கி இருந்தால் தேவனுடைய வல்லமை நம்மை சூழ்ந்து கொள்ளும். கர்த்தருடைய கரத்திலிருந்து சமாதானமும், சந்தோஷமும், பாதுகாப்பும், வழி நடத்துதலும், பாவ மன்னிப்பும், நித்ய ஜீவனும் நமக்குக் கிடைக்கும். ஏனென்றால் பிதா சகலத்தையும் அவரின் திருக்கரங்களில் ஒப்புக் கொடுத்துள்ளார். அவர் தேவனிடமிருந்து வந்தவர்.அவர் தேவனாக இருந்தவர். அவராலேயே சகலமும் உருவாயிற்று.அவருக்கென்றே சகலமும் படைக்கப்பட்டன. சகலமும் அவருடைய ஆளுகையின் கீழ் உள்ளது. நாம் கேட்டது நமக்கு கிடைக்கும். நாம் அவரிடம் கேட்காமலேயும் கிடைக்கும். ஏனென்றால், வேதம் கூறுகிறது, **'உங்களுக்கு இன்னது தேவை என்று உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார்'** என மத். 6:32 கூறுகிறது. நமது தேவைகளை ஏற்ற வேளையில் நாம் சிந்திப்பதற்கும், வேண்டுவதற்கும் அதிகமாகவே அவர் சந்திப்பார். அல்லேலுயா!

தியானமும் ஜெபமும்

பரிசுத்த வேதாகமத்தை நாம் அனுதினமும் வாசித்து, தேவனுடைய சத்தத்திற்கு செவி கொடுத்து அதன்படி, வேதத்தின் படி, தேவ சித்தத்தை அறிந்து அதன்படி நாம நடக்கின்ற சமயத்தில், தேவன் எப்போதும் நம்மோடேயே இருப்பார். அவருடைய பிரசன்னம், கிருபை, மகிமை, அபிஷேகம், வழி நடத்துதல், பாதுகாப்பு எப்போதும் இருக்கும். ஏனென்றால், நாம் அவருடைய பிள்ளைகள் அல்லவா? **'என் கற்பனைகளைக் கைக் கொள்கிறவர்கள் என் சொந்த ஜனமாக இருப்பார்கள்'** என்று வேதம் கூறுகிறதே. - உபா.26:18

நாம அவரோட கற்பனைகளைக் கைக் கொள்ளணும். அதன்படி நடக்கணும். அப்போ நாம அவரோட பிள்ளைகளாக இருப்போம். பிள்ளைகளாக அவரோட சகல சம்பத்துக்களுக்கும் பங்காளிகளாக, உரிமையுள்ளவர்களாக, வாரிசாக, பங்குதாரர்களாக இருப்போம். இம்மையிலும் நித்ய ஜீவனைப் பெற்றுக் கொண்டு சதா காலமும் நாம் அவரோடேயே என்றென்றைக்கும் இருப்போம்.

நம் வாழ்க்கையில் நாம் எதை இழந்திருந்தாலும், அதை ஆண்டவர் நமக்கு திரும்பத் தர வல்லவராக இருக்கிறார். சொத்தை இழந்திருக்கலாம், சுகத்தை இழந்திருக்கலாம், உறவை இழந்திருக்கலாம், பதவிகளை, வேலையை, சமாதானத்தை இழந்திருக்கலாம். கவலைப்பட வேண்டாம். தேவன் சகலத்தையும் திரும்பத் தருவார். அதுவும் இரண்டத்தனையாகவே திரும்பத் தருவார்.

தேவன் சகலத்தையும் கிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக் கொடுத்துள்ளார். அவரிடத்தில் இல்லாதது ஒன்றுமில்லை. சகலமும் அவரிடம் சம்பூர்ணமாய் இருக்கிறது. அவர் சம்பூரணர். நமக்கும் சகலத்தையும் சம்பூர்ணமாக கொடுத்து ஆசீர்வதிப்பார். ஜெபம் செய்வோமா?

சர்வ வல்லமையுள்ள சம்பூர்ண தேவனே! ஸ்தோத்திரம் தகப்பனே! உம்மைப் போல ஒரு தேவனை நாங்கள் இவ்வுலகில் கண்டதில்லை சுவாமி. வானம் சிங்காசனமும், பூமி பாதப்படியுமாய் இருக்கிற சர்வேஷ்வரனே! நீர் சீஷர்களின் கால்களைக் கழுவித் துடைத்தீரே. உம்முடைய தாழ்மை யாருக்கு வரும் தகப்பனே? அந்த மனத் தாழ்மையை எனக்கு கற்றுத் தாருங்கப்பா. எந்தச் சூழ்நிலையிலும் நான் மேட்டிமையான எண்ணம் கொள்ளாமல் என்னைத் தாழ்த்தி உம்முடைய திருப்பாதங்களில் ஒப்புக் கொடுக்க அருள் புரியுங்களப்பா. என்னால் ஆவது ஒன்றுமில்லை பிரபு. நான் நிற்பதும், நடப்பதுவும், நிர்மூலம் ஆகாதிருப்பதும் உமது சுத்த கிருபை சுவாமி! அனுதினமும் உமது சித்தத்தை அறிந்து செயல்படுகின்ற உமது பிள்ளையாக என்னை மாற்றும் தகப்பனே.

நான் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை எல்லாம் உமது ரத்தத்தால் கழுவி என்னை சுத்திகரியும். நான் இழந்த சந்தோஷம், சமாதானம், உறவு, சொத்து, சுகத்தை எனக்குத் திரும்பத் தாரும். உம்மோடு நான் என்றென்றைக்கும் இருக்கும் பெரும் பாக்கியத்தை எனக்குத் தாரும். நித்தியத்திற்கும் நான் உம்மோடு இருக்கணும். எங்கள் நித்திய பிதாவே! இந்த உலகத்தில் எனக்கு எதுவும் வேண்டாம் தகப்பனே! நீர் மட்டும் என்னோடு இரும். அது போதுமப்பா! உமது கிருபை ஒன்று மாத்திரம் எனக்குப் போதுமப்பா. இந்த பூமியில் வாழும் நாட்களெல்லாம் நான் உமது பலத்த கரத்திற்குள் அடங்கி இருக்க கிருபை தாரும். கிருபாகரரே! என்னை உம்மைப் போல மாற்றும். உமக்கு சாட்சியாக என்னை நிறுத்தும். இயேசு கிறிஸ்துவினுடைய இன்ப நாமத்தில் கேட்கிறேன் ஜெபம் கேளும், எங்கள் நித்திய பிதாவே! ஆமென்!

தியானம் - 15

ஆபத்பாந்தவரின் அரவணைக்கும் கை (பாகம் 5)

இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிக்கின்ற நிமிடத்திலிருந்து எப்போதும் நம்முடனேயே இருப்பார். நம்முடைய போக்கையும் வரத்தையும் பாதுகாப்பார். சகலவிதமான நாச மோசங்களுக்கும், கஷ்ட நஷ்டங்களுக்கும், ஆபத்துக்களுக்கும் நம்மை விலக்கிப் பாதுகாப்பார். அவருடைய அனுமதியின்றி நம் தலையிலிருந்து ஒரு முடி கூட உதிராது என வேதம் கூறுகிறது. நம்மைக் கண்ணின் மணியைப் போல காக்கின்ற தேவனல்லவா அவர்! இயேசு கிறிஸ்து கடலில் நடந்து வருவதைப் பார்த்தவுடன் பேதுரு தானும் அவரைப் போலவே கடலில் நடக்க ஆசை கொண்டு இயேசுவிடம் கேட்கிறார். இயேசுவை மட்டும் பார்த்துக் கொண்டு முழு விசுவாசத்தோடு இருக்கும்போது பேதுருவால் கடலின் மேல் நடக்க முடிகிறது.

தன் பார்வையை இயேசுவை விட்டு விலக்கி ஆர்ப்பரிக்கும் ஆழ்மான கடலையும், பொங்கி எழுந்து வரும் பேரலைகளையும்

பார்க்கிறார். பலத்த காற்று வீசுவதையும் பார்க்கிறார். ஐயோ நீரில் மூழ்கி விடுவோமோ என்கிற அவிசுவாசம் அவருள் தலை தூக்குகிறது. அடுத்த வினாடி நீரில் மூழ்க ஆரம்பித்து விட்டார். இயேசு உடனே கரம் நீட்டி பேதுருவை தூக்கிக் காப்பாற்றுகிறார் என்பதை மத் 14.29-31 எவ்வளவு அழகாகக் கூறுகிறது பாருங்கள். **'பேதுரு படகை விட்டிறங்கி இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான். காற்று பலமாய் இருக்கிறதைக் கண்டு பயந்து அமிழ்ந்து போகையில், 'இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய்?'** என்றார் என எழுதப்பட்டு இருக்கிறதையும் பார்க்கிறோம்.

எப்பேர்ப்பட்ட ஆபத்திலிருந்தும் அந்த ஆபத்பாந்தவர் நம்மைக் காக்க வல்லவராக இருக்கிறார். ஒரு மேய்ப்பனுக்கு தன் மந்தை ஆடுகளின் மேலேயே கண்ணும் கருத்தும் இருப்பது போல, அவரை விசுவாசிக்கின்ற அவருடைய பிள்ளைகளின் மேலேயே அவருடைய கவனமெல்லாம் இருக்கும். நாம் ஆண்டவரை மட்டும் பரிபூரணமாக நம்பி இருக்கையில் நம்மை எந்த ஆபத்தான சூழ்நிலையிலும் மிகத் தெளிவாகக் கடக்க வைப்பார். ஒருவேளை நம்மில் விசுவாசம் கொஞ்சம் கம்மியாகி, சூழ்நிலைகளைப் பார்த்து நாம் கலங்கி விட்டாலும், அவர் நம்மைக் காக்க வல்லவராக இருக்கிறார். அல்லேலுயா! வேண்டுவதெல்லாம் அவரின் மீது ஒரு அசைக்க முடியாத விசுவாசம், நம்பிக்கை மட்டுமே.

மட்டுமின்றி ஒரு பெற்ற தாயைப் போல அள்ளி எடுத்து அரவணைத்து ஆசீர்வதிக்கும் தேவன் அவர். இதற்கு நாம் குழந்தைகளைப் போல மாறணும். இந்த உலகத்தையே மறந்து ஒரு குழந்தை எப்படி தாயின் மடியில் அமைதி கொள்கிறதோ அதுபோல கிறிஸ்துவின் அரவணைப்பில் நாம் ஆறுதலும் அமைதியும் பெற வாஞ்சிக்கணும். ஒரு குழந்தையைப் போல கள்ளங் கபடமற்று மாறணும். இயேசு கிறிஸ்துவின் கரத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படி அநேக தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை அவரிடம் கொண்டு வந்தார்கள். அப்பொழுது **'இயேசு சிறு குழந்தைகளை அணைத்துக் கொண்டு அவர்கள் மேல் கைகளை வைத்து ஆசீர்வதித்தார்'** என்று மாற்கு

10:16ல் பார்க்கிறோம். **'நீங்கள் ஒரு குழந்தையைப் போல மாறாவிட்டால் பரலோகத்தை சுதந்தரித்துக் கொள்வது அரிது'** என்று ஆண்டவர் கூறியிருக்கிறாரே, சுபாவத்தில், குணத்தில், அன்பில், விசுவாசத்தில், பண்பில் நாம் குழந்தைகளைப் போல் மாறணும், எவ்வித சில்மிஷமும், கள்ளங் கபடமும் இல்லாமல் ஒரு குழந்தையின் மனசைப் போல நிஷ்களங்கமாக இருக்கணும். நிர்மலமாக மாறணும்.

நான் உனக்காக உயிரைக் கூடக் கொடுப்பேன். உனக்காக நான் எதையும் இழக்கத் தயாராக இருக்கிறேன்' என்றெல்லாம் ஆயிரம் டயலாக் பேசுகிறவர்களைப் பார்க்கிறோம். உண்மையிலேயே அப்படி யாரும் செய்வதில்லை. ஆனாலும் எந்த டயலாக்கும் பேசாமல் நாம் செய்த பாவங்களுக்காக, அக்கிரமங்களுக்காக, மீறுதல்களுக்காக, அநியாயங்களுக்காக அத்தனை தண்டனை களையும், ஆக்கிணைகளையும், நிந்தைகளையும், பாடுகளை யும், நமக்காக அனுபவித்து இரத்தம் சிந்தி, சித்திரவதைப்பட்டு கடைசியில் தன் இன்னுயிரையும் நமக்காகத் துறந்தாரே, அவருடைய பொன்னான சரீரம் உழுத நிலமாக மாறியது. அவர் உடம்பு ரத்தக் களரியாகியது. சதைகள் பிய்ந்து தொங்கின. இத்தனையும் செய்து நமக்கு பாப விமோசனம் தந்தார் இயேசு கிறிஸ்து.

நமக்காகப் பட்ட பாடுகளை நினைவுகூர்ந்து, நமது பாவங்களுக்காக பிய்க்கப்பட்ட அந்த சரீரத்தை நினைவு கூரும்படியாகவும், அப்படி நினைவுகூரும் போது நம்மால் இனி எந்த பாவத்தையும் துணிந்து செய்ய முடியாதபடிக்கு நம்மைத் தடுத்து நிறுத்தும்படியாக **'அவர் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காக கொடுக்கப்படுகிற என் சரீரமாக இருக்கிறது. என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள்'** என்றார் என்று லூக்கா 22:19ல் கூறப்பட்டு இருக்கிறது.

நமக்காக தன்னுயிரையே தியாகம் செய்த தியாகேஷ்வரன் அவர். ஒருபெற்ற தாய் கூட தன் பெற்ற பிள்ளைக்காக இத்தனை பாடுகளை அனுபவித்து இல்லையே. அதுவும் நாம் நீதிமான்களாக, பரிசுத்தவான்களாக, இருக்கும்போது அல்ல,

பாவியிலும் பாவியாக பெரும்பாவியாக இருக்கும்போதும் நமக்காக சகல பாடுகளையும் அனுபவித்தாரே, அவரை விசுவாசிப்பவர்கள், விசுவாசிக்காதவர்கள், எதிர்ப்பவர்கள், குறை கூறுபவர்கள் என அனைவருக்காகவுமே அந்தப் பாடுகளை அனுபவித்தாரே, இந்த உலகில் தெய்வம் என்று ஆராதிக்கப் படுகின்றவைகள் முப்பத்தி முக்கோடி இருக்கலாம். ஆனால் எந்த தெய்வமும் மனிதனுக்காக மரிக்கலையே. அதுவும் பாவிகளுக்காக இரத்தம் சிந்தலையே. உண்மையாகக் கூறினால் பாவிகளையும் மன்னிக்கலை, பாவத்தையும் மன்னிக்கலையே. பாவிகளை அதம் பண்ணவும், அழிக்கவும், கொல்லவுமே அவதாரம் எடுத்ததாக அனைத்து தெய்வங்களையும் குறித்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. நமது பாவங்களுக்காக மரித்த ஒரே தெய்வம் கிறிஸ்து மாத்திரம்தானே!

தியானமும் ஜெபமும்

'இந்த மலையைப் பார்த்து நீ சமுத்திரத்தில் தள்ளுண்டு போய் விழு என்று ஒருவன் இருதயத்தில் ஒரு சிறிதும் சந்தேகப்படாமல், விசுவாசத்தால், அவன் சொன்னபடியே நடக்கும்' என்று மாற்கு 11:23ல் விசுவாசத்தைக் குறித்து சொல்லப்பட்டு இருக்கிறது. **'விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பாய்.'** ஆண்டவரை விசுவாசித்தால், உன் முழு இருதயத்தோடு கொஞ்சமும் சந்தேகமில்லாமல் நீ விசுவாசித்தால் அவர் உன்னை சகல விதமான நாச மோசங்களிலிருந்தும், கஷ்ட நஷ்டங்களி லிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் நம்மைக் காக்க வல்லவராக இருக்கிறார் என்பதை பேதுரு கடலில் நடந்து கொண்டு இருக்கும்போது அவிசுவாசத்தினால் முழுகினார். அப்பொழுது ஆண்டவர் அவரை தூக்கி எடுத்தார்.

சுபாவத்தில், குணாதிசயத்தில், பண்புகளில், அன்பு செலுத்துவதில் நாம் ஒரு குழந்தையைப் போல் மாறணும். அப்போ ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை அரவணைத்து, ஆசீர்வதிக்கிறவராக இருக்கிறார். நம்முடைய பாவங்களுக்காக, சாபங்களுக்காக அவர் சரீரம் உழுத நிலமாக, ரத்தக்களறியாக மாறியது. கடைசி சொட்டு இரத்தம் சிந்தி நமக்கு பாவ

விமோசனம் கொடுத்தார். அதை ஒருபோதும் நாம் மறவாதபடி அவருடைய வருகை மட்டும் நினைவு கூறும்படியாக இராப்போஜனம் செய்யும்படியும் கூறினார்.

நம்மைப் படைத்த அந்தப் படையப்பாவின் அன்பிற்கு ஈடு இணையே கிடையாது.அந்த அன்பிற்கு தியாகத்திற்கு, நம்மை கண்ணின் மணியைப் போல் காக்கின்ற அந்த தேவனுக்கு நாம் செய்வது என்ன?

அவர் செய்த நன்மைகளை சொல்லிச் சொல்லி ஒவ்வொரு நிமிடமும் நன்றி பலி ஏறெடுக்கணும், துதிக்கணும், ஆராதிக்கணும். அவர் ஒருவரே மெய்யான தெய்வம் என்று விசுவாசிக்கணும். ஜெபம் செய்வோமா?

'எங்கள் இருதயத்தைக் கொள்ளை கொண்ட எங்கள் கன்மலைக் கர்த்தரே! அன்பிற்கு இலக்கணம் வகுத்து வாழ்ந்து காட்டிய வள்ளலே! உம்மைத் துதிக்கிறோம் தகப்பனே! நாங்கள் நீதிமான்களாக இருக்கும்போது அல்ல, நீர் அருவருக்கின்ற அனைத்துக் காரியங்களையும் செய்கின்ற பாவியாக இருக்கும்போது நீர் எங்களைத் தேடி வந்தீர். கல்வாரி சிலுவையிலே கடைசி சொட்டு ரத்தம் வரை சிந்தி எங்களுக்கு பாப விமோசனம் கொடுத்தீர். அதற்கு கோடானு கோடி ஸ்தோத்திரம் தகப்பனே. உம்முடைய அன்பிற்கு பிரதியாக நான் என்ன செய்தேன் தகப்பனே? நன்றியோடு துதிக்கிறேன். நீரே கதி என்று உம்முடைய திருக்கரத்தில் என்னையும், என்னிடம் உள்ள சகலத்தையும், சொத்து பத்து நகை நட்டு என அனைத்தையும் ஒப்புக் கொடுக்கிறேனப்பா.

உம்முடைய அளவற்ற அன்பை, தியாகத்தை, இன்னும் இவ்வுலகம் அறிந்து கொள்ளவில்லையே பிரபு. இனி அதை இவ்வுலகிற்கு, உம்மை அறியாத ஜனங்களுக்கு எடுத்துக் கூறுவதை என் தலையாய கடமையாக எண்ணி, இனி உமக்காகவே வாழ்வேன். வாழும் ஒவ்வொரு நிமிடமும் உம்முடைய இராஜ்ஜியத்தைக் கட்ட ஓடி ஓடி உழைப்பேன். உம்முடைய அன்பை எடுத்துக் கூறுவேன். ஒரு குழந்தையைப் போல் உம்மை அண்டி அரவணைக்கும் பாக்கியத்தை எனக்குத் தாரும். நீர் எனக்காக பட்ட பாடுகளை ஒருபோதும் மறவாது என்

நினைவில் என்றென்றும் நிலைத்திருக்கும்படி அதை அனுதினமும் நினைவு கூற எனக்கு கிருபை தாரும். எந்தச் சூழ்நிலையிலும் உம்மை விட்டு விலகாத அசைக்க முடியாத விசுவாசத்தைத் தாரும். அது ஒன்று போதும் எனக்கு தகப்பனே! இயேசு கிறிஸ்துவினுடைய மாறாத நித்ய நாமத்தில் கேட்கிறேன், எங்களை அதிகமாக நேசிக்கின்ற எங்கள் பரலோக பிதாவே! ஆமென்!

தியானம் 16

செங்கோலைப் பிடித்த கையில் செங்குருதி வழிந்தது

(பாகம் 6)

'இவர் யதர்களின் ராஜாவாம்' என்று தம்மை இவர் கூறிக் கொள்கிறார் என பிலாத்துவின் முன்பாக குற்றம் சாட்டப்பட்ட யூதகுல சிங்கமான இயேசுவைப் பிலாத்து விசாரிக்கின்ற சமயத்தில் இயேசு **'நீர் சொல்லுகிறபடி நான் இராஜாதான்'** என்று ஒத்துக் கொண்டு தன் இராஜ்யத்தின் தன்மையை உணர்த்தினார். பிலாத்துவும் யூதர்களும் இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத் தன்மையைப் புரிந்து கொண்டு மனந்திரும்ப வேண்டியதற்குப் பதிலாக, **'நான் ராஜாதான்'** என்று அவர் சொன்ன வார்த்தைகளின் நிமித்தம் அவரை இன்னும் பரிகாசம் பண்ணும் முகமாக **'அவருக்கு முள் முடி சூட்டினார்கள். அவருடைய வலது கையில் ஒரு கோலைக் கொடுத்தார்கள். பின்பு அதே கோலைப் பிடுங்கி அவரை சிரசில் அடித்தார்கள்'** - (மத் 27:30). அந்த நாணாலினால் ஆன கோல் ஒருவேளை அவருடைய கரத்திலேயே இருந்திருக்க வேண்டும். இயேசு 'தாகமாக இருக்கிறேன்' என்று சொன்னபோது காடி தோய்க்கப்பட்ட கடல் காளானை மாட்டி அவரின் வாயின் அருகே நீட்டி உறிஞ்சக் கொடுத்தார்கள். அதற்கு அவர்கள் இந்த நாணல் கோலையே பயன்படுத்தி இருக்கலாம். யூதாவின் செங்கோலை பிடிக்க வேண்டிய கைகளில் நாணல் கோலை கொடுத்து பரிகாசமும் கேலியும் பண்ணினார்கள்.

'அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர் முன்பாக முழங்கால் படியிட்டு யூதருடைய இராஜாவே வாழ்க என்று அவரைப் பரிகாசம் பண்ணினார்கள்' என்று மத் 27:29ல் சொல்லப்பட்டு இருக்கிறதை எண்ணிப் பார்க்கும்போது நமக்காக, நமது பாவங்களுக்காக அந்த சர்வ வல்ல சர்வேஷ்வரன் எப்பேர்ப்பட்ட பரிகாசங்களையும் கேலிகளையும், எள்ளி நகையாடல்களையும் சந்தித்திருக்கிறார் என்று காணும்போது உள்ளமெல்லாம் உடைகிறது. நெஞ்சம் நடுங்குகிறது.

இயேசு கிறிஸ்துவினுடைய தோளின் மேல் ஒரு பெரிய சிலுவை ஏற்றப்படுகிறது. அதைச் சுமந்து கொண்டு எருசலேமின் தெருக்கள் வழியாக அவர் தள்ளாடித் தள்ளாடி நடந்து செல்லுகின்றார். சிலுவையின் பளுவால் அவர் அடிக்கடி இடறிக் கீழே விழுகிறார். ஒரு மேட்டில் பார வண்டியை இழுக்க முடியாமல் திக்கித் திணறும் மாட்டை வாலை முறுக்கி, தார்க் கோலினால் அடித்து, அந்தக் கோலில் உள்ள ஆணியினால் குத்தி அது இன்னும் வேகமாகப் போகும்படி ஈவு இரக்கமற்ற வண்டிக் காரன் செய்வதுபோல் ரோம போர்ச் சேவகர்கள் இடறி விழும் இயேசுவை வாரினால் அடித்து, குத்தி, காலினால் எத்தி விரட்டுகின்றனர். அவருக்குப் பின்னே பல ஸ்தீரிகள் அழுது கொண்டு போகிறார்கள். பத்து மாதம் சுமந்து பெற்ற மேரியும் உள்ளம் துடிதுடிக்க இயேசு படுகின்ற பாடுகளைக் கண்டு இரத்தக் கண்ணீர் வடித்தபடி சென்றிருப்பார். இயேசுவின் சீஷர்களும் அவரைப் பின்தொடர்ந்து சென்றிருப்பார்கள்.

எங்கே நம்மையும் பிடித்து சிலுவையில் அறைந்து விடுவார்களோ என்கிற அச்சத்தில் சற்று பின் தங்கியே இயேசுவைப் பின்தொடர்ந்திருப்பார்கள். அழுகின்ற ஸ்திரீகளைத் திரும்பிப் பார்க்கிறார் இயேசு. ஆறுதல் படுத்தியபடியே திரும்பவும் தட்டுத் தடுமாறி நடக்கிறார். பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள வார்த்தைகள் அனைத்தும் அப்படியே உயிர் பெற்று எழுந்து என் மனத்திரையில் காட்சியாக மலர்கின்றன. ஆனாலும் என் கண்களில் கண்ணீர் இல்லை. என் உள்ளம் குமுறவில்லை. உலகத்தின் ஏதோ மூலையில் எப்போதோ நடந்த கொடுமைகளை டி.வி.யில் பார்ப்பது போன்று ஒரு உணர்வற்ற

மரத்துப்போன ஒரு மனநிலைதான். நெஞ்சில் ஒரு படபடப்பு இல்லை. தொடர்ந்த அக்கிரம சிந்தனைகளினாலும், பாவ எண்ணங்களினாலும் ஒரு மரத்துப் போன தன்மைதான் இருக்கிறது. இருதயத்தில் இத்தனை பாடுகளும் நான் அனுபவிக்க வேண்டியதில்லவா? எனக்குக் கிடைக்க வேண்டிய தண்டனையை என் இரட்சகரல்லவா அனுபவிக்கிறார் என்கிற ஒரு குத்தல், குற்ற உணர்வு இல்லை.என் பாவங்களினால் ஐயோ நான் எப்படி கடினப்பட்டு போயிருக்கிறேன். நான் கண்ணீர் விட்டு அழுதிருந்தால் ஆண்டவர் எங்களையும் திரும்பிப் பார்த்திருப்பார். அவரின் கனிவான பார்வை என் மேல் விழுந்திருக்கும்.

நான் சுமக்க வேண்டிய சிலுவையை என் தேவன் சுமக்கிறார்.**'என்னைப் பின்பற்ற விரும்புகிறவன் தன்னைத் தானே வெறுத்து தன் சிலுவையை சுமந்து கொண்டு என் பின்னால் வரக் கடவன்'** என்று ஆண்டவர் கூறியிருக்கிறாரே. அதுவும் சும்மா அப்படியே அல்ல. **'அதே சிலுவையில் உன் மாம்சத்தையும் இச்சைகளையும் அறைந்து எடுத்துக் கொண்டு என் பின்னே வா'** என்றல்லவா கூறியிருக்கிறார் - (கலா. 5:24). மாம்ச எண்ணங்களையும், காம, சிற்றின்ப இச்சைகளையும், உலகப் பிரகாரமான ஆசைகளையும், உன் சிலுவையில் அறை.மரண பரியந்தம் உண்மையாக இரு. **'ஜெயங் கொள்கிறவன் எவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிக்கப்படும். அவனுடைய பெயரை ஜீவ புத்தகத்திலிருந்து நான் கிறுக்கிப் போடாமல் பிதாவின் முன்பாக நான் அறிக்கை செய்வேன்'** என்று நமது தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறாரே! ஜெயம் கொள். இச்சைகளை, ஆசைகளை ஜெயம் கொள். சிலுவையில் அறை. கிறிஸ்து சுமக்கின்ற சிலுவையை அவரின் தோளிலிருந்து நீ வாங்கிக் கொண்டு நீ தூக்கிக் கொண்டு நட.

தியானமும் ஜெபமும்

கிறிஸ்து பல தரம் இடறி விழுகிறதைக் கண்டு சீரேனே சீமோன் வந்து தோள் கொடுத்து சிலுவையை சிறிது தூரம் சுமக்கிறான். ஊரைக் கடக்கிறீர். பூர்வ அரசரின் கல்லறைத்

தோட்டத்து வழியாகச் செல்லுகிறீர். மண்ணோடு மண்ணாகிப் போயிருந்த உலர்ந்த எலும்புகளுக்கு ஜீவனின் அதிபதி கடந்து போகும் பெரும் பாக்கியம் கிடைக்கிறது. அப்புறம் இன்னேரம் பள்ளத்தாக்கை கடக்கிறீர். மேடும் பள்ளமுமாய், கரடு முரடாயிருக் கிற அந்தப் பாதையில் நீர் தட்டுண்டு தடுமாறி கனமான சிலுவையை சுமக்க முடியாமல் மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்க அந்த மலைப்பாதையில் நடக்கிறீர்.நீர் கொல்கொதாவின் அடிவாரம் வருகிறீர்.உமக்குப் பின்னே வரும் கூட்டம் உம் மீது விழுகின்ற ஒவ்வொரு அடிக்கும் மார்பில் அடித்துக் கொண்டு ஓலமிடு கின்றனர்.ஆனால் என் கல் நெஞ்சமோ உருகக் காணோம்.

உம்முடைய வஸ்திரங்களை உரிகின்றனர். ரத்தக் கிளறியான உமது பொன்னான உடம்பைக் கண் கொண்டு பார்க்க முடியவில்லை. பாவிகள் எப்படி ஈவு இரக்கமில்லாமல் உமது உடம்பைப் பிளந்து எறிந்து இருக்கிறார்கள். சிலுவ்வயை பூமியிலே போடுகிறார்கள். அதன் மேல் உம்மைக் கிடத்துகிறார்கள். இன்னும் என் கல் நெஞ்சு உடையவில்லை. சிலுவையின் மீது மல்லாக்கக் கிடக்கும் உமது திருக்கரங்கள் இரண்டையும் சேவகர்கள் இழுக்கிறார்கள். உமது உள்ளங்கை துவாரத்திற்கு சற்று தூரமாக இருப்பதால் தம் கட்டி பலமாக முரட்டுத்தனமாக கயறு கட்டி அந்தத் துவாரம் வரை இழுக்கிறார்கள். உமது நெஞ்சு எலும்புகளெல்லாம் எண்ணக் கூடியதாகத் தெரிகிறது. ஒரு சேவகன் நீளமான, பருமனான ஆணிகளையும், ஒரு பெரிய சுத்தியலையும் கொண்டு வருகிறான். அந்த ஆணிகளை உமது உள்ளங் கைகளில் வைத்து பலமாக அறைகிறான். அந்த ஆணி உமது உள்ளங்கையை துளைத்துக் கொண்டு ஒவ்வொரு சுத்தியலின் அடிக்கும் உள்ளே இறங்குகிறது. இரத்தம் பீறிட்டு வழிகிறது. நீர் பல்லைக் கடித்துக் கொண்டு துடியாய்த் துடிக்கிறீர்.

இப்போதுதான் என் குலை நடுங்குகிறது.

இப்பொழுதுதான் என் நெஞ்சும் உடைகிறது.

இப்பொழுதுதான் என் கல்நெஞ்சு வெடித்துச் சிதறுகிறது.

இப்போதுதான் என் ஆத்துமா அலறுகிறது.

இப்பொழுதுதான் என் தொண்டையை ஏதோ ஒன்று அடைக்கிறது.

இப்பொழுதுதான் என் கண்களில் அருவியாகக் கண்ணீர் கொட்டுகிறது.

உமது கைகளில் கடாவப்பட்ட ஆணிகளின் முகாந்திரத்தை, காரணத்தை நான் உணர்கிறேன். அது எனது கைகளில் அறையப்பட வேண்டிய ஆணிகள் அல்லவா? நான் செய்த பாவங்கள் அல்லவா என் தேவனை இந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளது. நான் பாவி, நான் பாவி, நான் பாவியிலும் பெரும் பாவி, நான் எத்தனை பாவங்களை, அநியாயங்களை, அக்கிரமங்களை, கொடுமைகளைச் செய்திருக்கிறேன். ஐயோ நினைக்க நினைக்க என் உள்ளம் எல்லாம் பதறுகிறது. அந்தச் சிலுவையில் அறையப்பட வேண்டியவன் நானல்லவா? எனக்காக, என் பாவங்களுக்காக, என் தேவன் இத்தனை பாடுகளையும் சகித்தாரே, நீ ஒரு கேடு கெட்ட ஜென்மம். நீ செய்துள்ளவைகளை எல்லாம் உன்னைப் பெற்ற தாய் அறிந்திருந்தால், உன் மூஞ்சியிலேயே அவள் முழிக்க மாட்டாள். உன்னைப் பெற்ற தந்தை அறிந்திருந்தால், உன் மூஞ்சியிலேயே காறித் துப்பி நீ என் மகனே இல்லை என்று கூறியிருப்பார். நீ எப்பேர்ப்பட்ட இழிவானவன் என்பதை அறியாத உன் மனைவி, உன் நண்பர்கள் அனைவருமே உன்னை வெறுத்து ஒதுக்கி இருப்பார்கள். ஆனால் உன்னுடைய சகல பாவத்தையும் கண்டு அறிந்த அந்த சர்வ வல்ல தியாகேஷ்வரன், உன்னை வெறுத்து ஒதுக்கவில்லை. உன்னை தன் உயிரினும் மேலாக நேசிக்கிறார். தன் உயிரைக் கொடுத்து உன்னை தப்புவிக்கிறார். தன்னுடைய பரிசுத்தமான இரத்தத்தினால் நீ செய்த பாவங்களை எல்லாம் கழுவி உன்னை சுத்தீகரிக்கிறார்.

உனக்காக உன் பாவங்களுக்காக அவர் அத்தனை பாடுகளையும் பட்டு மரித்தார் என்பதை இன்னும் நம்பாமல் முழுமையாக மனம் திரும்பாமல் வெறும் பேர்க் கிறிஸ்தவர்களாக, பேரில் கிறிஸ்தவர்களாக, சண்டே கிறிஸ்தவர்களாக இருக்கின்ற என் அன்பான சகோதர சகோதரிகளே, இயேசுவை இன்னும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்ற எனது அன்பு சகோதர,

அதில் தெய்வீகம் வெளிப்படும். சகலத்தையும் படைத்த அந்த சர்வேஷ்வரனே மனித அவதாரம் எடுத்து வந்து, பிணியாளிகளைத் தொட்டார். தொட்ட மாத்திரத்தில் அனைவரும் அற்புத சுகம் பெற்றனர். செவிடர்களின் செவிட்டுக் காதுகள் திறக்கப்பட்டன. ஊமையர்களின் நாவுகள் கட்டவிழ்க்கப் பட்டுப் பேசினர். மத் 9:32ல் மத்தேயு சுவிசேஷகர் இயேசு ஒரு ஊமையனை குணமாக்கி பேச வைத்ததைக் குறித்து எழுதியிருக்கிறார்.

'இயேசு தீரு, சீதோன் பட்டணங்களின் எல்லைகளை விட்டுப் புறப்பட்டு, தேக்கப் போலியின் எல்லைகளின் வழியாய் கலிலேயக் கடலருகே வந்தார்.அங்கே கொன்னை வாயுடைய ஒரு செவிடனை அவரிடத்தில் கொண்டு வந்து அவர் தமது கையை அவன் மேல் வைக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். அவர் தமது விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு, வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு எப்பத்தா என்றார். அதற்கு திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம்.உடனே அவனுடைய செவிகள் திறக்கப்பட்டு, அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செம்மையாகப் பேசினான்' என்று மாற்கு 7:31-35ல் கூறப்பட்டு இருக்கிறது. மத்தேயுவில் பார்த்த ஊமையன் பிசாசு பிடித்தவனாக இருந்தான். இவனோ ~~இயல்பாக~~வே, பிறவியிலேயே ஊமையனாக இருந்தான். செவிடர்கள் பெரும்பாலும் ஊமையர்களாகவே இருப்பார்கள். நாவின் குறையினால் அல்ல.பேசும் வார்த்தைகளை கேட்டு அறிந்து கொள்ள செவித்திறன் இல்லாத காரணத்தினாலேயே.

'அவன் செவ்வையாகப் பேசினான்' என்று சொல்லப்படுகிற குறிப்பினால் அவன் முன்பு கொஞ்சம் பேசினான். அது அரைகுறையாக இருந்தது என்று சிலர் எண்ணுகிறார்கள். அவன் கொஞ்சம் பேசக் கூடுமானால், அவனுக்கு நாவின் கட்டுகள் இல்லையானால் இயேசு உமிழ்ந்து அவன் நாவைத் தொட வேண்டிய அவசியம் இருந்திராது. அவன் பரிபூரண சுகம் பெற்றான் என்பதையே 'செவ்வையாகப் பேசினான்' என்கிற குறிப்பு காட்டுகிறது.

இயேசுவின் கைவிரல் தொடுதலினால் சுகம் மட்டுமல்ல, நமது பாவங்களை கிறுக்கிப் போடுகிறவரும் அவரே. ஜீவ புத்தகத்தில்

நம் பெயரை எழுதுகிறவரும், கிறுக்கிப் போடுகிறவரும் அவரே. **'உன் பெயரை நான் கிறுக்கிப் போடாமல் பிதாவின் முன்பாக அறிக்கை செய்வேன்'** என்று வெளி 3:5ல கூறியிருக்கிறாரே. யோ:8:6-8ல் **'இயேசுவோ குனிந்து விரலினால் தரையிலே எழுதினார். அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து, உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதல் கல்லை எறியக் கடவன்'** என்று சொல்லி, மறுபடியும் அவர் குனிந்து தரையில் எழுதினார் என்று பார்க்கிறோம். ஒரு விபச்சார ஸ்திரீயை கல்லெறிந்து கொல்வதற்கு அவரின் முன் கொண்டு வந்தபோது இது நடந்தது. அவர் தரையில் என்ன எழுதினார் என்று யாருக்கும் தெரியாது. அங்கே நின்றிருந்த ஒவ்வொருவருடைய பாவத்தையும் கூட அவர் எழுதிக் காட்டியிருக்கலாம். ஆனால் வந்த அனைவருமே தலையைக் குனிந்து கொண்டு வெட்கத்தோடே திரும்பிப் போனார்கள்.

விபச்சாரியும் தன் பாவ வாழ்க்கையிலிருந்து மனந் திரும்பினாள். சீனாய் மலையிலே முன்பு ஆக்கிணைக்கு ஆளாக்கும் பத்துக் கட்டளைகளை கல்லிலே எழுதிக் கொடுத்தார். இப்போது, ஆக்கிணையை தன் சொந்த விரலினால் கிறுக்கி தண்டனையிலிருந்து தப்புவிக்கிறார்.

தியானமும் ஜெபமும்

என் ஆத்துமாவே! இயேசு கிறிஸ்துவின் திருக்கரத்தின் விரல்களை நோக்கி உன் கண்களை ஏறெடுத்து தியானம் செய். இயேசு கிறிஸ்துவினுடைய விரல்கள் எனது செவிகளை முழுமையாகத் திறக்கட்டும்.வேத சத்தியத்தை முழுமையாகக் கேட்கக் கூடாதபடிக்கு அவ்வப்போது எனது செவிகள் இந்த உலகப் பிரகாரமான எண்ணங்களால் அடைபடுகிறது.தேவ வார்த்தைகளுக்கு செவி கொடுக்க முடியாதபடி நான் செவிடனாக இருக்கிறேன். இயேசுவின் விரல்கள் என் செவிப் பறையைத் தொட்டு, தேவ சத்தத்தைக் கேட்கத் தடையாக இருக்கும் என் செவிட்டுத் தன்மையை சுகமாக்கட்டும். அவரின் விரல்கள் என் நாவைத் தொடட்டும். சுவிசேஷத்தை அறிவிக்க, ஆண்டவரின் வார்த்தைகளை அனைவருக்கும் பகிர்ந்து கொள்ள தயங்கும் எனது நாவின் கட்டுக்களை அவிழ்க்கட்டும்.

நான் செய்த பாவங்கள், அக்கிரமங்கள், ஒன்றா இரண்டா? நான் செய்த பாவங்களை நினையாமல், திருத்தாமல், மற்றவர்களின் பாவங்களை குறைகளை எவ்வளவு கூசாமல் என் விரல்களை நீட்டி சுட்டிக் காட்டியிருக்கிறேன். விரல்களை நீட்டி குற்றம் சுமத்தி, மனம் புண்படும்படி பேசியிருக்கிறேன். நான் கிறிஸ்தவனாக இருப்பதினால் தப்பித்தேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்.

ஆண்டவர் தன் விரல்களால் நீ செய்தவைகளை எல்லாம் எழுதி எழுதிக் காட்டுகிறார்! அவர் தன் கைப்படவே, தன் கை விரல்களால் எழுதிக் கொடுத்த நியாயப் பிரமாணங்களை நீ மீறுகிறாயா? சிந்தித்துப் பார். நீ மனந் திரும்பினால் உன் பாவங்களை அவர் கிறுக்கிப் போடுவார். உன்னை நோக்கி எவரும் விரல் நீட்டி குற்றம் சுமத்தாதபடிக்கு உன்னைத் தன் கைகளால் மூடி பாதுகாப்பார். நீ மனந்திரும்பாமல் அவரின் வார்த்தைகளுக்கு நீ செவி கொடாமல் செவிடனாய் இருந்தால், அவருடைய வார்த்தைகளை மற்றவர்களுக்கு கூறாமல் நீ ஊமையாக இருந்தால், அவர் உன் பெயரையே ஜீவ புத்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவார். எது உனக்கு வேண்டும்?

உன் செவிகளை, உனது நாவை ஆண்டவரின் வார்த்தைகளுக்கு மாத்திரம் திறந்து கொடு. உனது நாவு அவரது புகழை மாத்திரம் பாடட்டும். அவரின் சுவிசேஷத்தை மாத்திரம் அறிவிக்கட்டும். உன் வாழ்க்கையை அவருக்காக, அவரின் இராஜ்ஜியம் கட்டப்படுவதற்காக ஒப்புக் கொடு.

சகல நன்மைகளுக்கும், கிருபைகளுக்கும் மூலமாக இருக்கின்ற எங்கள் தேவனே! உமது விரல்களினால் என் செவிகளைத் திறந்தருளும், உமது விரல்களினால் என் நாவின் கட்டுகளை அவிழ்த்தெறியும். உமது விரல்களினால் நான் இதுவரை செய்த பாவங்களை எல்லாம் கிறுக்கிப் போடும். என் குறைகளை எல்லாம் நீக்கி உமது அரவணைப்பிற்குள் வரும்படியான கிருபைகளைத் தாரும். நீர் ஒருவரே என் பாவங்களை, குறைகளை நீக்க வல்லவராக இருக்கிறீர். உமது கிருபாசரம் என் வாழ்விலும், தாழ்விலும், நன்மையிலும், தீமையிலும், இன்பத்திலும், துன்பத்திலும், வியாதியிலும்,

சுகத்திலும், பெலத்திலும் அனுதினமும்,என்றும் எப்போதும் இருக்க ஜெபிக்கிறேன். ஜெபம் கேட்டருளும் விண்ணப்பத்தைக் கேட்கும் எங்கள் விண்ணகத் தந்தையே! ஆமென்!

தியானம் - 18

கர்த்தாதி கர்த்தரின் காதும், கன்னமும்

கடந்த அத்தியாயங்களில் இயேசு கிறிஸ்துவினுடைய பாதம் முதல் கரம் வரையுள்ள மகத்துவங்களை நாம் தியானித்தோம். இப்போது அவருடைய கன்னத்தையும், காதையும் தியானிப்போம். அவருடைய கன்னம், காது குறித்து ஒவ்வொரு குறிப்பு மாத்திரமே சுவிசேஷ புத்தகத்தில் கூறப்பட்டு இருக்கிறது. ஆகையால் அந்த இரண்டையும் ஒன்றாய் ஆராய்ந்து தியானிப்போம்.

இயேசு கிறிஸ்து கடைசி முறையாக எருசலேமுக்கு வந்தபோது ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர்.அவர்கள் தங்கள் வஸ்திரங்களை தரையில் விரித்து ஓசன்னா பாடினார்கள். பெரியவர்களோடு அவர்களின் பிள்ளைகளும் வந்திருந்தனர். குழந்தைகளும் பெரியவர்களோடு சேர்ந்து உற்சாகத்துடன் ஓசன்னா பாடினார்கள். குழந்தைகள் முதற்கொண்டு இப்படி ஆர்ப்பரிக்கிறதைக் கண்டு பிரதான ஆசாரியருக்கும், வேதபாதகருக்கும் பயங்கர கடுப்பு, வயிற்று எரிச்சல், பொறாமை, கோபம். ஜனங்கள் பின் தொடர ஓசன்னாவின் ஒலி உன்னதத்தை எட்ட, உரத்த குரலில் பாடி ஆர்ப்பரித்தபடியே அனைவரும் தேவாலயத்திற்கு வருகின்றனர். அவர் தேவாலயத்திற்கு வந்த பின்பு குருடர்களும், சப்பாணிகளும் இயேசுவினிடத்தில் வந்தார்கள். இவர்கள் தேவாலய வாசலில் பிச்சை எடுத்துக் கொண்டு இருந்தவர்களாய் இருக்கலாம். இவர்களை குணமாக்கியது அருகில் நின்றிருந்த சிறுவர்களின் வாயைத்

திறந்து விட்டது போலும். **'தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா'** என்று துள்ளிக் குதித்து மகிழ்ச்சியில் பாடுகின்றனர், துதிக்கின்றனர். இதை மத்தேயு சுவிசேஷகர் அழகாக மத் 21:15, 16ல் கூறுகிறார்.

'அவர் செய்த அதிசயங்களையும், தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்று தேவாலயத்தில் ஆர்ப்பரிக்கின்ற பிள்ளைகளையும் பிரதான ஆசாரியரும், வேத பாரகரும் கண்டு, கோபமடைந்து அவரை நோக்கி, 'இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றார்கள். அதற்கு இயேசு ஆம், கேட்கிறேன். குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை ஒருக்காலும் நீங்கள் வாசிக்கவில்லையா?' என்றார்.

கள்ளங் கபடமற்ற குழந்தைகள், சிறுவர்கள், தங்கள் மழலை மொழியில் தேவனைத் துதித்து ஆர்ப்பரித்து கோஷமிடுவதைக் கேட்க எந்தப் பெற்றோருக்குக் கசக்கும்? பிள்ளைகளின் மழலை மொழி கேட்டால் கல் மனமும் கரையுமே. கர்த்தரின் கனிவான மனம் கரையாதிருக்குமா? குழந்தைகளை என்னண்டையில் வரவிடுங்கள் என்று நம் ஆண்டவர் கூறுகின்றாரே. குழந்தைப் பருவத்திலேயே பிள்ளைகளுக்கு பக்தியை ஊட்ட வேண்டும். வேதத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளுக்கு பாட்டு கற்றுக் கொடுத்து பாட வைக்க வேண்டும். தவறாமல் தேவாலயத்திற்கு அழைத்து சென்று ஆராதனைகளிலே பங்கு பெற வைக்க வேண்டும். தேவாலய சண்டே கிளாஸில், கோடை விடுமுறை, பள்ளி விடுமுறை நாட்களில் நடைபெறும் வேதாகம பயிற்சிகளில் கண்டிப்பாக கலந்து கொள்ள வைக்கணும். தேவாலய பாடல் குழுவில் சேர்ந்து பாட வைக்கணும்.

கிட்டார், கீபோர்டு, வயலின், டிரம்ஸ், தபலா, பேடு போன்ற வாத்தியங்களை கற்றுக் கொள்ள உற்சாகப்படுத்தணும். கர்னாடிக் மியூசிக், ஹிந்துஸ்தானி, கஜல், வெஸ்டர்ன் மியூசிக் என எல்லா இசைகளிலும் நமது பிள்ளைகள் தேர்ச்சி பெறணும். கர்னாடிக் மியூசிக் கற்றுக் கொள்ளும்போது, கீர்த்தனையைத் தவிர்த்து மற்றவைகளை கற்றுக் கொள்ளலாம், கர்னாடிக் ராகங்களில் நமது ஆண்டவரை துதிக்க, பாடல்கள் பாட பயிற்றுவிக்க வேண்டும். கிராமியப் பாடல்கள், தெம்மாங்கு, கும்மி, கோலாட்டம்,

தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபம் என்று அனைத்து விதங்களிலேயும் நமது நாட்டு கலாச்சாரத்தின் பிரகாரம் தேவனை ஆராதிக்க நாம் ஆர்வம் காட்டணும். அப்படி நாம் செய்கின்ற சமயத்தில் ஆண்டவரைக் குறித்த நற்செய்தி, வேதத்தில் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் ஜனங்களை எளிதாகக் கவரும், சென்றடையும். அதுவும் குழந்தைகளுக்கும் அது மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கும். இதை அனைவருமே ரசிப்பார்கள்.

குழந்தைகளுக்கும் அது மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கும். இது அனைத்தையும் விட தேவனை அது மிகவும் பிரீதிப்படுத்தும். வேத சத்தியத்தில் வளர்க்கப்படும் பிள்ளைகள் நல்ல பண்புகளில் வளருவார்கள். ஆகவேதான் நம் ஆண்டவர் குழந்தைகளை என்னண்டையில் வரவிடுங்கள் என்றார். குழந்தைகள் எப்படி இருக்கணும்னு நீங்க நினைக்கிறீர்களோ, அதற்கு முன் உதாரணமாக நாம இருக்கணும். **'நீயே சகல நற்கிரியைகளுக்கும் முன்மாதிரியாகக் காண்பி'** என்று தீத்து 2:7ல் சொல்லப்பட்டு இருக்கிறதே. **'குழந்தைகள் தேவன் கொடுத்த ஈவு'** அவர்களை அவரின் கிருபையில், சத்தியத்தில், அபிஷேகத்தில் மகிமையில் வளர்க்கணும்.

இயேசு கிறிஸ்துவின் கன்னத்தைக் குறித்து ஒரே ஒரு இடத்தில் மாத்திரம் கூறப்பட்டு இருக்கிறது. **'வேலைக்காரரும் கன்னத்தில் அறைந்தார்கள்'** என்று மாற்கு. 14:65ல் சொல்லப்பட்டு இருக்கிறது. லூக்கா 22:64ல் **'முகத்தில் அறைந்தார்கள்'** என எழுதப்பட்டு இருக்கிறது. முகத்தில் அறைந்தும், கன்னத்தில் அறைந்ததும் ஒன்றல்ல. கன்னத்தில் அறைந்தது இயேசுவின் முகத்தை துணியால் மூடுவதற்கு முன்பும், முகத்தில் அறைந்தது துணியால் மூடிய பிறகும். பாவிகள் எப்படியெல்லாம் அடித்துக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். நினைக்க நினைக்க நெஞ்சம் பதறுகிறது.

தியானமும் ஜெபமும்

குழந்தைகளும், சிறுவர்களும் ஓசன்னா பாடித் திரிந்து, பிரதான ஆசாரியனுக்கும், வேதபாரகருக்கும் எரிச்சலை

உண்டாக்கியது. இந்தத் துதியும், பாடலும், கீர்த்தனையும், ஆராதனையும் இயேசு கிறிஸ்துவுக்கு புதுசா? பரலோகத்தில் தேவ தூதர்களும், பரமண்டலங்களும், அவைகளில் உள்ள அதிகாரங்கள் அனைத்தும், கேருபின்களும், சேராபீன்களும் ஓயாமல் கீத வாத்தியங்கள் முழங்க பாடி ஆராதித்துக் கொண்டு இருக்கின்றனரே. அவர் படைத்த சிருஷ்டிகள் அனைத்தும் அவரைத் துதித்துப் பாடி ஆராதிக்கின்றனவே. வானில் பறக்கும் பட்சிகளின் சத்தத்தைக் கேளுங்கள்.

அதிகாலையில் எழுந்த உடனேயே தேவனை நினைத்து அவைகள் கீதம் பாடுகின்றன. மிருகங்களின் கர்ச்சனை, சமுத்திரத்தின் இடைவிடாத இரைச்சல், காற்றுக்களின் சத்தம், இடிமுழக்கம் எல்லாமுமே நம் கர்த்தாதி கர்த்தரை எந்நேரமும் ஆர்ப்பரித்து ஆராதிக்கும் கீதங்கள்தானே. இவைகள் அனைத்தும் நம் தேவாதி தேவனை போற்றிப் புகழ்ந்து துதிக்கும் சுப்பிரபாதங்கள்தானே.

இயற்கையோடு சேர்ந்து, இறைவனின் சகல சிருஷ்டிப்பு களோடு சேர்ந்து நம்மையெல்லாம் அதிசயமாக, அதி அற்புதமாகப் படைத்து, கண்ணின் மணியைப் போல அனுதினமும் காத்து வழி நடத்துகின்ற ஆத்தும இரட்சகரை நாம் குடும்பமாக ஆராதிக்க வேண்டும். குழந்தைகள், பெரியோர் அனைவரையும் ஒன்று சேர்ந்து பாடித் துதித்து, நன்றி பலி ஏறெடுக்கணும். தனியாகவும் ஜெபிக்கணும். குடும்பமாகவும் ஜெபிக்கணும்.

அதிகாலையில் தேவனைக் கண்டடையத் தக்க நேரத்தில் எழுந்து துதிக்கணும். உபவாசித்து ஜெபிக்கணும், போராடி ஜெபிக்கணும், ஊக்கமாகச் ஜெபிக்கணும். முழு இருதயத்தோட, ஆர்வத்தோடே ஜெபிக்கணும். விழித்திருந்து ஜெபிக்கணும். இருதயத்தை ஊற்றி ஜெபிக்கணும். நாம எல்லாருமே ஆண்டவரோட பிள்ளைகள்தாம். நாம் பேசுறதை, துதிக்கிறதை, ஆராதிக்கிறதைக் காது கொடுத்துக் கேட்கணுங்கிறதுக்காக கிறிஸ்து ஆவலோட காத்திருக்காரு.

[illegible]

[illegible]

[illegible]

தியானம் - 19

வாய்மையே பேசிய வல்லதேவனின் வாய்

கிறிஸ்துவின் வாயின் வார்த்தைகள் கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்திருந்தன. அதனாலேயே அவருடைய திருவாய் கிருபை உள்ள வார்த்தைகளையே பேசின. **'வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'** என்று யோ 1:16ல் அவரின் திருவாயின் வார்த்தைகள் கூறுகின்றனவே. **'நீதிமான்களை அல்ல. பாவிகளை மனந்திரும்பு வதற்கு அழைக்கவே வந்தேன்'** என்று மத் 9:13ல் பாவிகளின் மேல் காட்டும் பரிவு அவர் வாயிலிருந்து வெளிவந்ததே. அவருடைய போதகத்தைக் கேட்ட அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். அவரின் வாயின் வார்த்தைகள் வல்லமையை, வாய்மையை, அன்பை, கிருபையை வெளிப்படுத்தின.

லூக்கா 4:22ஐப் பாருங்கள். **'எல்லோரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும், வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார். அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள்.' 'நாசரேத்து ஆலயத்தில் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு ஒரு பேய் அலறி அடித்துக் கொண்டு ஓடியது'** என லூக்கா 4:26ல் பார்க்கிறோமே. கடலின் கொந்தளிப்பையும் அவரின் வாயின் வார்த்தைகள் அடக்கி விட வல்லமையுள்ளதாக இருந்தது. அவர் போதித்த உபதேசங்களும் வல்லமையுள்ளதாகவே இருந்தன.

சிலுவையில் அறையப்படுகிறவர்களுக்கு வெறி உண்டாக்கும் ஒருவிதக் காடி கொடுப்பது அப்போதைய வழக்கம்.

மத்தேயு அதைக் கசப்புக் கலந்த காடி என்றும், மாற்கு அதை வெள்ளைப் போளம் கலந்த திராட்சை ரசம் என்றும் அழைக்கிறார்கள். இயேசு கொல்கதாவுக்கு போன உடனேயே வழக்கப்படி இந்த மதுவைக் கொடுத்தார்கள். அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இயேசுவோடு சிலுவையில் அறையப் பட்டவர்கள் அவர்கள் பங்கை சாப்பிட்டார்கள். இயேசு சிலுவையில் தொங்கும் போது **'தாகமாய் இருக்கிறேன் என்றார். காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டு இருந்தது.அவர்கள் கடற் காளானை காடியிலே தோய்த்து, ஈசோப்புத் துண்டில் மாட்டி அவர் வாயினிடத்தில் நீட்டினார்கள்'** என்று யோ 19:28, 29ல் கூறப்பட்டுள்ளது. ஜீவத் தண்ணீரை தாகமுள்ள யாவர்க்கும் அள்ளி அள்ளிக் கொடுத்த தேவனின் தவித்த வாய்க்கு தண்ணீர் கூட கொடுக்கவில்லை பாவிகள்.

'அவர் பாவஞ் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை' என 1 பேதுரு 2:22ல் பார்க்கிறோம். ஆம் அவர் வாயில் பாசம் இருந்தது, பாவம் இருந்தது இல்லை. பரிவு இருந்தது. பரிகாசம் இல்லை. பண்பு இருந்தது. பசப்பு, பகல் வேஷம் இல்லை. அவர் வாயில் அன்பு இருந்தது. அகங்காரம், அகந்தை, அநியாயம் இருந்ததில்லை. **'இருதயத்தின் நிறைவு வாயால் வெளிப்படும்'** என்று லூக்கா 6:45 கூறுகிறது. இயேசுவின் இருதயம் பரிசுத்தமுள்ளதாக இருந்தபடியால், அவர் வாயில் பாவம் வெளிப்படவில்லை. **'என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்'** என்று கேட்டார் என்று யோ 6:46ல் அனைவரிடமும் சவால் விட்டுக் கேட்கும் அளவுக்கு அவர் பரிசுத்தமுள்ளவராக இருந்தது மாத்திரமல்ல. அவர் மற்றவர்களின் பாவங்களையும் மன்னித்தார். (லூக்கா 7:48)

கிறிஸ்துவின் வாய் பரிசுத்த ஆவியையும், பாவமன்னிப்பின் அதிகாரத்தையும் கொடுத்தது. ஆதி மனுஷனுக்கு தன் ஜீவ சுவாசத்தையே ஊதி ஜீவாத்துமாவாக ஆக்கினவர் இப்போது தமது சீஷர்களுக்கு பரிசுத்த ஆவியை ஊதி, பாவ மன்னிப்பின் அதிகாரத்தையும் அவர்களுக்கு அருளினார். யோ 20:22, 23 ஐப்

பாருங்கள். அவர்கள் மேல் ஊதி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். **'எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அவைகள் அவர்களுக்கும் மன்னிக்கப்படும். எவர்களுடைய பாவங்களை மன்னிக்காதிருக்கிறீர்களோ, அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்'** என்றார்.

தியானமும் ஜெபமும்

ஆத்தும நேசரின் திருவாய் கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும், நிறைந்த ஒரு பொக்கிஷம்.பாவ மன்னிப்பையும், தெய்வீக சமாதானத்தையும் அருள்கின்ற தேன் சுரப்பி. அவரும் கிருபை, அவரின் வாயும் கிருபை. அவரின் பெயரும் கிருபை. பேச்சும் கிருபை, செய்கையும் கிருபை. அவரின் பிறப்பும் கிருபை, இறப்பும் கிருபை, கிருபையே கிருபை. அந்த அளவற்ற கிருபை அரவணைக்கும், ஆறுதல் படுத்தும். **'என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை'** என்று யோ 6:37ல் உறுதி அளிக்கின்றாரே. இன்னும் என்ன தயக்கம்? போ..ஓடு.. அவரையே நாடு, அவரை மட்டுமே தேடு.வேண்டிய கிருபைகளைப் பெற்றுக் கொள். பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள். ஜீவ சுவாசத்தைக் கொடுத்தவர் உனக்கு நித்ய ஜீவனைத் தருவார். நீ பாவம் செய்யாதபடி உன்னை வழி நடத்துவார். செய்த பாவங்களை மன்னிப்பார்! மறப்பார்.

கானாவூரில் சாதாரணத் தண்ணீரை மதுரமான திராட்சை இரசமாக்கினவருக்கு கசப்புள்ள காடியைக் கொடுத்தனர். ஆண்டவரே என் வாழ்க்கை உமக்கு கசப்பைத் தராமல், மதுரமாய் இருக்கும்படி நடப்பேன் அய்யா. கிருபை உள்ள என் தேவனே! என் மேல் தயவாய் இரும். உம்முடைய திருவாயிலிருந்து புறப்படும் உபதேசங்களும், கட்டளைகளும் என் ஆத்துமாவுக்கு ஞான போஜனமாகவும், பானமாகவும் இருக்கும்படி கிருபை தாரும். பரிசுத்த ஆவியானவரை எனக்குத் தந்தருளி என்னை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்த கிருபைகள் தாரும்.

பாவமில்லா பரிசுத்த ஜீவியத்திற்கு இலக்கணமாய் இருந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறேன். எங்கள் ஜீவனுள்ள பரம பிதாவே! ஆமென்!

தியானம் - 20

உன்னதமானவரின் உமிழ்நீர்

'அவர் (இயேசு) அவனை ஜனக் கூட்டத்தை விட்டு தனியே அழைத்துக் கொண்டு போய், தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து அவனுடைய நாவைத் தொட்டார்' (மாற்கு 7:33) 'அவர் (இயேசு) குருடனுடைய கையைப் பிடித்து அவனை கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டு போய் அவன் கண்களில் உமிழ்ந்து... எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். அவன் ஏறெடுத்துப் பார்த்து நடக்கிற மனுஷரை, மரங்களைப் போல காண்கிறேன் என்றான்' என்று மாற்கு 8:23, 24ல் கூறப்பட்டு இருக்கிறது. 'அவர் (இயேசு) தரையிலே துப்பி, உமிழ் நீரினால் சேறுண்டாக்கி, அந்த சேற்றை குருடனுடைய கண்களின் மேல் பூசி, நீ போய் சிலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே அவன் போய் கழுவி, பார்வை அடைந்தவனாய் திரும்பி வந்தான்' என்று யோ 9:67ல் காண்கிறோம்.

இது மாத்திரமல்ல, இயேசு கிறிஸ்துவின் நாவின் நீர் நமது நாவின் திமிரையும் போக்கும் வல்லமை பெற்றது. சமயத்தில் நாம் நாவினால் பேசுகின்ற வார்த்தைகளே நமக்கு தீராத தலைவலியையும், பிரச்சனைகளையும், பிரிவுகளையும், உறவுகளில் விரிசல்களையும் உண்டாக்கி விடுகின்றன. நாவடக்கம் நமக்கு மிகவும் தேவை. 'உன் வாயின் வார்த்தைகளினாலே நீ நீதிமான் என்றும், குற்றவாளி என்றும் தீர்க்கப்படுவாய்.' 'வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனை தீட்டுப்படுத்தும்.' 'ஜீவனும் மரணமும் உன் வாயின் வார்த்தைகளிலே இருக்கிறது' என வேதம் தெளிவாகக் கூறுகிறது.

நாம நாவை அடக்கி அளந்து பேசணும். அளந்து திங்கணும், பேசக் கூடாத வார்த்தைகளை கூசாமல் நமது நாக்கு பேசுகிறத னாலதான் பல குழப்பங்கள், குடும்பத்தில் பிரச்சனைகள் எல்லாம் உருவாகிறது. கணவன் - மனைவிக்குள்ள, மாமியார் மருமகள் உறவுகள்ல, உடன் பிறந்தோருக்குள்ள, அக்கம்பக்கத்தில்

அண்டை அயலார் உறவுகளில் பிரிவு வர்றதுக்கு காரணமே இந்த நாவுதான். நாம நாவை அடக்கி, நலமான, சுமுகமான, நல்ல வார்த்தைகளைப் பேசும் போது அங்கே அன்பு, ஐக்கியம், ஒற்றுமை வளர்கிறது. உறவு பலப்படுகிறது.பல பிரச்சனை களுக்கு தீர்வு கிடைக்கிறது.

சுவிசேஷத்தை அறிவிக்கும்போது, ஆண்டவருடைய ஊழியத்தை செய்யும் போதும், நமது நாவின் வார்த்தைகள் மிகவும் முக்கியம். ஆண்டவருடைய வார்த்தைகளை சரியான முறையில், தெளிவாக, அன்போடு எடுத்துக் கூறுகின்ற சமயத்தில் அந்த நாவின் வார்த்தைகள் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைக்கும். கிறிஸ்துவை மறுதலிக்கின்ற வாய், இருதயம், இயேசுவை ஏற்றுக் கொள்ளும். தேவனுடைய இராஜ்யம் கட்டப்பட நமது நாவின் கட்டுக்கள், தயக்கம், தடிமன் எல்லாம் எடுத்து எறியப்பட வேண்டும். நமது நாவு எப்போதும் சத்தியத்தையே பேச வேண்டும். நமது கொன்ன வாயை சீர்படுத்தும் வல்லமை இயேசு கிறிஸ்துவின் வாயின் அமுத நீருக்கே இருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் உமிழ்நீர் சாதாரண ஒரு எச்சில் அல்ல. அது பிணி தீர்க்கும் சஞ்சீவி. பரம ஔஷதம், அது குருடர்களுக்கு பார்வையைக் கொடுத்தது.ஊமையரை பேச வைத்தது. ஊனக் கண்களை மாத்திரமல்ல, குருடனாய் இருக்கிற நம்முடைய மனக் கண்ணையும் அது திறந்து சத்தியத்தை அறியும்படி செய்யும். **'நாவானது பெரிய காரியங்களை நிறைவேற்றும் சிறிய சக்கரம் போல் இருக்கிறது. அது ஆயுள் சக்கரங்களையும், அதைச் சேர்ந்த இயந்திரங்கள் அனைத்தையும் கறைப்படுத்தி, துருவேற்றி கொளுத்திப் போடத்தக்க சூட்சும சக்கரமாய் இருக்கிறது'** என்று யாக்கோபு யாக் 3:5,6ல் கூறியிருக்கிறார். சத்திய வேதப் புத்தகத்தை நாம் பலமுறை படித்தும் கூட சில சமயம் சில வசனங்களுக்குரிய ஆவிக்குரிய ஆழ்ந்த சத்தியங்களை நம்மால் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆண்டவர் நமது கண்களைத் தொடுகின்ற சமயத்தில் புரியாத கருகலான சத்தியங்களையும் புரிந்து கொள்ளும்படி நம்முடைய அகக் கண்களை, அறிவுக் கண்களை அவர் திறப்பார்.

தியானமும் ஜெபமும்

ஆத்துமநேசரின் வாயின் உமிழ்நீருக்கு சகல நோயையும் தீர்க்கும் வல்லமை இருக்கிறது. அது அமுதம். சர்வரோஹ நிவாரணி. இயேசு கிறிஸ்துவினிடத்தில் வைத்தியம் செய்யும்படி நான் என் நாவை நீட்டின நாள் முதலாக ஒரு பெரிய வித்தியாசத்தைக் காண்கிறேன்.முன்பு என் நாவு உலகப் பிரகாரமான பல விஷயங்கள் பற்றி பேசிக் கொண்டு இருந்தது. அதில் கோபம், அகங்காரம், பெருமை, மூர்க்கத்தனம், பொய், பித்தலாட்டம், வஞ்சகம், கடும் சொற்கள் எல்லாமும் இருந்தன. இப்போது எனது நாவு அந்தக் கட்டுகளிலிருந்து விடுபட்டு அமைதலோடு,அன்போடு, பொறுமையோடு, நீதியோடு, நன்மையானவைகளை, ஆறுதலானவைகளை சத்தியத்தைப் பேசுகிறது. ஆண்டவரின் சத்திய வார்த்தைகளைப் பேசுகிறது.

இதனால் என் இருதயத்தில் ஒரு அமைதி, நிம்மதி, சந்தோஷம், சமாதானம் நிலவுகிறது. இதன் நிமித்தம் என்னால் வேதத்தை வாசிக்கவும், தியானிக்கவும் ஜெபிக்கவும், தேவனைத் துதிக்கவும் முடிகிறது. நன்றி தகப்பனே. உமது வாயின் உமிழ் நீரே சத்திய வார்த்தைகளாக வெளிப்பட்டன. அவைகளே நீதியையும், சத்தியத்தையும் நேர்மையையும் போதிக்கிறது. உமது திருவசனமாகிய உமிழ் நீர் எப்போதும் என்னையும், என் நாவையும் பாதுகாக்கட்டும் சுவாமி. தீமைகளுக்கு, பாவங் களுக்கு, சிற்றின்பங்களுக்கு நான் குருடனாகவும், நல்லவை களுக்கு, ஆவிக்குரிய கனிகளை, வரங்களைப் பெற்றுக்கொள்ள எனது கண்கள் திறக்கப்பட்டவைகளாயும் இருக்கட்டும் பிரபு.

தயவுள்ள தயாபரனே! எங்கள் கன்மலையே! என் நாவு உமது துதியை, மகிமையை, மகத்துவத்தை எப்போதும் சொல்லிக் கொண்டே இருக்க கிருபை தாரும். உமது உமிழ் நீர் இரட்சண்ய தைலம். அதை என் நாவிலும், கண்களிலும் பூசும். உம்மிடத்தில் வந்த குருடர் எல்லாம் கண்ணில் காட்சியோடும், வாயில் பாட்டோடும் சென்றது போல் அடியேனும் ஆவிக்குரிய பார்வை பெற, எனது நாவு எப்போதும் உம்முடைய சத்திய வார்த்தைகளையே பேசும்படியாக,என்னை உமது உமிழ் நீரினால் தொட்டருளும். வாக்கு மாறாத தேவனாகிய இயேசு கிறிஸ்துவின்

நித்ய நாமத்தில் கெஞ்சிக் கேட்கிறேன்.என் விண்ணப்பத்தை கேட்டு எனக்கு மனமிரங்கும், என் நித்ய பிதாவே! ஆமென்!

தியானம் - 21

கர்த்தாதி கர்த்தரின் கனிவான கண்கள் (பாகம் 1)

சுத்தக் கண்ணராகிய கர்த்தாதி கர்த்தரின் கருணை மிகு கண்ணைக் குறித்து பல குறிப்புக்கள் பரிசுத்த வேதாகமத்தில் இருக்கின்றன. அவற்றில் மூன்றை மாத்திரம் நாம் இந்த அத்தியாயத்தில் தியானிப்போம். இயேசு கிறிஸ்துவின் கனிவான கண்கள் மூன்று முறை அழுதது என்று வேதம் குறிப்பிடுகிறது. லாசருவின் மரணச் செய்தியைக் கேட்டபோது (யோ 11:35), எருசலேம் நகருக்காக (லூக்கா 19:42), சர்வ லோகத்துக்காகவும் (எபி 5:7) இயேசு கண்ணீர் சிந்தினார்.

இருதயம் அளவற்ற அன்பினால் நிறைந்திருக்கும்போது, நேசிக்கப்படுகிறவர்கள் துன்பப்படும்போது, கண்களில் தானாகவே கண்ணீர் வடியும். கடின இருதயம் படைத்தவர்கள், கொடூர எண்ணங்கள் கொண்டவர்களின் கண்கள் எப்பேர்ப்பட்ட துக்க காட்சிகளைக் கண்டாலும் அவைகள் வறண்ட நிலமாகவே இருக்கும். இயேசு கிறிஸ்து அனுபவித்த எப்பேர்ப்பட்ட துக்க காட்சிகளைக் கண்டாலும் அவைகள் வறண்ட நிலமாகவே இருக்கும். இயேசு கிறிஸ்துவின் உள்ளமோ கருணை, இரக்கத்தின் ஊற்று. அந்த இருதயத்தில் அன்பு, பாசம், நேசம், மன்னிப்பு, இரக்கம், தயவு தவிர வேறு எந்த உணர்வுகளுமே அங்கு கிடையாது. அவரைப் போல ஜனங்களை நேசக்கிற ஒரு தெய்வம் இந்த உலகத்தில் வேறு எதுவுமே கிடையாது.

இயேசு கிறிஸ்துவின் அன்பின் எல்லைக்கு அளவே கிடையாது. அவர் நேசித்த ஜனங்களின் ஒட்டு மொத்த பாவங்களுக்காக தன்னையே பலியாக அர்ப்பணம் செய்தாரே, எத்தனை பாடுகள், நிந்தைகள், அவமானங்கள், சித்திரவதைகள், சாவிலேயும் சாவு கொடுமையான சாவு, வேதனையிலும் தாங்க

முடியாத வலியிலும், துடியாய் துடித்து துடித்து சாவதைப் போல் ஒரு கொடுமை வேறு எதுவுமே இருக்க முடியாது. இதெல்லாம் யாருக்காக? அவர் நேசிக்கின்ற ஜனங்களுக்காக, அப்படி நேசிக்காத ஜனங்களுக்காகவும் இத்தனை பாடுகளையும் பட யாருக்கு மனம் வரும்?

லாசருவின் மரணத்திற்காக மாத்திரம் இயேசு அழ வில்லை. லாசருவின் சகோதரிகள் மரியாள், மார்த்தாள் இருவரையும் ஆண்டவர் நேசித்தார். சகோதரனின் இறப்பு குறித்து அந்த இரண்டு சகோதரிகளும் அழுதபோது அது இயேசுவையும் அழ வைத்தது. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் எந்த இழப்பிற்காகவும் கண்ணீர் விட்டு கதறுகின்ற சமயத்தில் கர்த்தரின் கருணையையும், கவனத்தையும் ஈர்ப்பார்கள். கண்ணீர் கர்த்தரின் இருதயத்தைத் தொடும். தான் படைத்த பிள்ளைகள் அழுவதை நம்மைப் படைத்த தாயுள்ளம் கொண்ட தந்தை சகிப்பாரோ? இயேசுவிடம் இருதயத்தை ஊற்றி கண்ணீர் விட்டு கதறி அழுதால் போதும், பரத்தை விட்டு இறங்கி ஓடி வந்து நம் வேண்டுதல்களை பூர்த்தி செய்வார் இயேசு.

எருசலேமுக்காகவும், அவரே படைத்த இந்த சர்வலோகத் துக்காகவும் இயேசு கண்ணீர் விட்டார். சர்வ லோகமும் அழியும்போது, அதில் அவர் படைத்த சகல ஜீவ ராசிகளும் அழியுமே. அவர் மனிதர்களை மட்டுமா நேசிக்கிறார். வானத்தில் பறக்கும் பறவைகள், காட்டு, நாட்டு மிருகங்கள், சமுத்திரத்தில் வாழும் மச்சங்கள் என எல்லாவற்றையுமே அவர் நேசித்தார். ஒருவரும், எதுவும் கெட்டுப் போவது அவர் சித்தமல்ல. வானம், பூமி, இந்தப் பிரபஞ்சம், அதில் உள்ள சூரியன், சந்திரன், மற்ற கோள்கள், நட்சத்திரங்கள், பூமியுள்ள சகல ஜீவ ராசிகளையும் அவர் மனிதனுக்காகவே படைத்து ஆண்டு கொள்ளும்படி கூறியுள்ளாரே.

அவர் படைத்த மனிதர்கள் சத்தியத்திற்கு புறம்பாக நடந்து, அருவருக்கத்தக்க பல அக்கிரமங்களையும், பாவங்களையும் செய்து அதனால் தேவ கோபாக்கினையை வரவழைத்துக் கொள்கிறார்களே என்ற ஆதங்கத்தில் அவர் அழுதார். சர்வ லோகமும் அழியும் போது அதில் உள்ள கெட்டவர்கள் மாத்திரமல்ல, நல்லவர்களும், அவர்களுடைய குழந்தைகளும்

சேர்ந்து அழிவார்களே என்கிற வேதனையில் அவரின் கண்களில் கண்ணீர் சுரந்தது. இயேசுவைப் போல ஒரு அன்புள்ளம் கொண்ட வேறு தெய்வம் இல்லையே. அதனால்தான் அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப் பார்த்து, அதற்காக கண்ணீர் விட்டார்' என்று லூக்கா 19:41ல் அந்த பக்தன் எழுதுகிறான்.

எபிரேய நிரூபத்தில் இயேசு கண்ணீர் விட்டதைக் குறித்து விசேஷமாய் எழுதியிருந்தாலும், **'மாம்சத்தில் இருந்த நாட்களில்'** என்று எழுதிய வார்த்தைகள் அவர் ஜீவ காலத்திலெல்லாம் சர்வ லோகத்துக்காக தாம் ஏற்றுக் கொண்ட பொறுப்பை எண்ணி கண்ணீர் சிந்தினார் என்று உணர்த்துகிறது. நாமும் திருச்சபை களில் நமது ஊருக்காக, தேசத்திற்காக, இனத்தார், ஜனத்தாருக்காகச் ஜெபத்தை ஏறெடுக்கிறோம். ஏனோதானோ என்று ஒரு கடமைக்காகச் ஜெபிக்கிறோம்.

இயேசுவைப் போல என்றைக்காவது கண்ணீர் விட்டுக் கதறி உண்மையான பாரத்தோடு, வேதனையோடு ஜெபித்திருக் கிறோமோ? என்று எண்ணிப் பாருங்கள். இயேசு சர்வ லோகத்துக்காகவும், **'அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில்... பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்தார்'** என்று எபிரேய நிரூபம் எபி 5:7ல் எழுதப்பட்டு இருக்கிறது. தேசத்திற்காக, இந்த லோகத்திற்காக ஜெபிக்க வேண்டிய முறை அது.

நம்மைப் படைத்த தேவன் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை என்று வேதம் கூறுகிறது. ஆனால் அவர் மாம்சத்தில் மனித அவதாரம் எடுத்து வந்தபோது ஒரே ஒருமுறை இயேசு தூங்கினார் என்று லூக்கா 8:23ல் பார்க்கிறோம். வானத்தையும் பூமியையும் படைத்த அந்த சர்வ வல்ல தேவனுக்கு இப்பூமியில் தலை சாய்க்க இடமில்லை. அவர் சிறிது நேரம் கண்ணயர்ந்தது பூமியில் அல்ல, வீட்டில் அல்ல, மலையில் அல்ல, கடலில் மிதந்த கப்பலிலே அவர் ஒரு சிறிது இளைப்பாறினார். கடலே அவருக்கு கட்டிலாயிற்று. அவர் உறங்கும்போது கடல் கொந்தளித்தது, புயல் வீசியது. படகு கவிழ்ந்து விடும் போல மேலும் கீழும் ஆடியது. புயல் வீசினால் என்ன? கடல் கொந்தளித்தால் என்ன?

இயேசு படகில் இருந்தாரே. அவர் கூட இருக்கும்போது எது என்ன செய்து விட முடியும்? பிரச்சனைகள், கஷ்டங்கள் எல்லாம் வாழ்க்கையில் இருக்கத்தான் செய்யும். அதோட நம்மோட ஆண்டவரும் கூட இருக்காரே. ஆண்டவர் கூட இருக்கிறதை மறந்ததுனாலதான் பேதுருவும் மற்றவர்களும் படகு ஆடுகிறதைப் பார்த்து பயந்தார்கள். அப்போதுதான் ஆண்டவர் கேட்டாரு. அற்ப விசுவாசியே ஏன் பயந்தீர்கள்? என்று. கர்த்தர் நம் மோட இருக்கும்போது, ஏன் கவலைப்படணும்? எல்லாவற்றை யும் அவர் பார்த்துப்பாரே.நம் தேவனால் கூடாதது என்ன இருக்கு? ஒரு கிறிஸ்தவனுக்கு ஆண்டவர் மேல் ஒரு அசைக்க முடியாத விசுவாசம் இருக்கணும். நாம் ஒரு கல்லையோ மண்ணையோ, சிலையையோ ஆராதிக்கலையே.ஜீவனுள்ள தேவனையல்லவா ஆராதிக்கிறோம்.

'அவர்களுடைய இருதயக் கடினத்தின் நிமித்தம் அவர் விசனப்பட்டு கோபத்துடனே சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்தார்' என்று மாற்கு. 3:5ல் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.இயேசு தமது ஊழிய காலத்தில் ஓய்வு நாளில் ஏழு அற்புதங்களைச் செய்தார். ஒரு ஓய்வு நாளில் அவர் அற்புதங்களைச் செய்யப் போகிறார் என அறிந்து அவரை குற்றஞ்சாட்டுவதற்காக வந்திருக்கிறதை அறிந்து, அவர் தமது கண்களினால் கோபமாகப் பார்த்தார். ஜனங்கள் தேவாலயத்துக்கு வந்தது ஆண்டவரை ஆராதிப்பதற்காக அல்ல. அவரை குற்றம் சுமத்துவதற்காக வந்தார்கள். இன்னும் நம்மில் அநேகர் சண்டே அன்று ஒரு சம்பிரதாயத்துக்காகத்தான் சர்ச்சுக்கு வருகிறார்கள். உண்மையான ஒரு பக்தியோடு, ஆர்வத்தோடு அல்ல.

ஆண்டவரை ஆராதிப்பது நமக்குக் கிடைத்த பெரிய பாக்கியம் அல்லவா? சிலர் சர்ச்சுக்கே வர்றது இல்லை. இவர்கள் எல்லாம் என்ன கிறிஸ்தவர்கள்? **'சபை கூடி வருதலை விட்டு விடாதிருங்கள்'**னு ஆண்டவரே சொல்றாரு. சர்ச்சு இருக்கிற பக்கம் தலை வைத்தே படுக்கிறது இல்லை. சில பேர் ஞாயிற்றுக்கிழமை மட்டும்தான் வருவாங்க. வந்து யாரோடவும் பேசாம, முகமன்கூட கூறாமல் வந்தோம்கிற ஒரு திருப்திக்கு வந்துட்டுப் போவாங்க. மற்ற நாட்களிலே, உபவாச ஜெபம், பைபிள் ஸ்டடி, வாலிபர் கூட்டம், பெண்கள் கூட்டம், நற்செய்திக் கூட்டம் என்ற எதுக்குமே வரமாட்டாங்க.

அவங்க பாக்குற உத்தியோகம், வேலைதான் அவங்களுக்கு முக்கியம். வெறும் சண்டே கிறிஸ்தவர்கள், அதுவும் காலை 8 ஆராதனைக்கு அவங்க வீட்டை விட்டுக் கிளம்புறதே 8.30, 8.45 அல்லது 9 மணிக்குத்தான். துதி, ஆராதனைப் பாட்டெல்லாம் ஏற்கனவே நமக்கு தெரிஞ்ச பாடல்கள்தானே. செய்திக்கு மட்டும் போனாப் போதாதா? என்கிற ஆவியில் ஒரு செத்த, மந்த நிலை. ஆதியில் இருந்த அந்த அன்பு, அனல் இப்போ இல்லை. அனலும் இல்லாம, குளிரும் இல்லாத ஒரு வெதுவெதுப்பு நிலை. சபையில் செய்தி கொடுக்கும்போது அதை குறிப்பு எடுத்துக் கொள்ள ஒரு நோட்டு கொண்டு வர்றது கிடையாது. செய்தியின் போது சொல்லப்படுகின்ற வசனங்களை எழுதி வச்சு வீட்டுக்குப் போன பிறகு அதை ஒரு தடவை ரிவ்யூ பண்ணி வசனங்களை ஒரு முறை பார்த்தால், வசனங்களை இருதயத்திலே வச்சு வைக்க முடியும். இப்படிப்பட்ட பெயர் கிறிஸ்தவர்களையும், சண்டே கிறிஸ்தவர்களையும், ஆவியில் அனல் இல்லாதவர்களையும் ஆண்டவர் கோபத்தோடேயே பார்ப்பார்.

தியானமும் ஜெபமும்

கர்த்தாதி கர்த்தரின் கண்கள் கண்ணீர் விட்டு அழுதது என்கிற வார்த்தையை படிக்கின்ற போது நம்மையும் அறியாமல் கண்களில் கண்ணீர் சுரக்கிறது. **'எல்லாருடைய கண்ணீரையும் துடைத்து அவர்களை மகிழ்ச்சியினால் இடைக்கட்டுகிற தேவன் அழுகிறார்'** (எபி 5:7) இரட்சகரே! **'உம்முடைய கண்கள் சத்தியத்தை அல்லவோ நோக்குகின்றன'** (எரே 5:3). சத்தியத்தை அநியாயத்தினாலும், அநீதியினாலும் பாவங்களினாலும் அடக்கிப் போட்ட எருசலேமைக் கண்ட உடனே நீர் மனந் தாளாமல் அழுகிறீர். என் ஆத்துமாவாகிய ஞான எருசலேமுக்காக எத்தனை முறை அழுதீரோ. என் இதயக் கபடம் உம்மை அழச் செய்கிறது. நெருப்பினில் இட்ட மெழுகைப் போல் எனக்காக உருகி, அனுதாபப்பட்டு, உமது கண்கள் கண்ணீர் சொரிகிறது. ஆவியில் அனல் இல்லாமல் வெறும் பெயர்க் கிறிஸ்தவனாக நான் இருப்பதைக் கண்டு கோபம் கொள்கிறீர்.

என்னுடைய இந்த அலட்சியப் போக்கினால் நீர் உறங்குவதில்லை, தூங்குவதும் இல்லை. எனக்காக என்னைப்

போல் இருக்கின்ற முக்கால்வாசி கிறிஸ்தவர்களுக்காக ஆத்தும பாரமின்றி நிர் விசாரமாய் இருக்கின்ற கிறிஸ்தவர்களின் நிமித்தம், கள்ள தீர்க்கதரிசனம் உரைக்கின்ற போதகர், ஊழியக்காரர்களின் நிமித்தம், திருச்சபைகள் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் இன்று பணமே குறியாக, கிறிஸ்தவத்தை தங்களுடைய பிழைப்பிற்காக ஒரு தொழில் போல செய்கின்ற போதகர்களை எண்ணி எண்ணி கண்ணீர் விட்டு கலங்கி அழுகிறீர். அப்படி அழுது அழுது அசந்துபோய் ஒரே ஒரு முறை படகில் உம்மையும் அறியாமல் சற்றே கண் அசந்தீரோ?

இரக்கமுள்ள இயேசுவே! பாவத்தைப் பாராத சுத்தக் கண்ணரே! சத்தியத்தை மட்டும் நோக்கும் எங்கள் நீதியுள்ள தேவனே! வெறும் பெயர்க் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும் என்னை ஒரு விசை மன்னியும். ஆவியில் என்னை அனலாக மாற்றும். உம்மைப் போல தேசத்திற்காக, அழிகின்ற ஆத்துமாக்களுக்காக பாரப்பட்டு கதறி கண்ணீர் விட்டு அழுது ஜெபிக்கின்ற பாரத்தை எங்களுக்குத் தாரும். நாங்கள் எங்கள் பாவங்களுக்காக கண்ணீர் விட்டு கத றி மனந்திரும்ப எங்களுக்கு கிருபை தாரும். நீர் வடித்த கண்ணீர் எங்களை சுத்தீகரிக்கட்டும் தகப்பனே. எங்களை உம்முடைய திருப்பாதங்களிலே முழுமையாக ஒப்புக் கொடுத்து ஜெபிக்கிறோம். ஜெபம் கேளும் ஜீவனுள்ள எங்கள் பரலோக பிதாவே! ஆமென்!

தியானம் - 22

கர்த்தாதி கர்த்தரின் கனிவான கண்கள் (பாகம் 2)

கரை காணா கருணை உள்ளங் கொண்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கண்களைக் குறித்து மூன்று குறிப்புகளை தியானம் 21ல் பார்த்தோம். மேலும் இரு குறிப்புகளை இந்த அத்தியாயத் தில் நாம் தியானிப்போம். தேவாலயத்திலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அமர்ந்து ஞானோபதேசங்களை போதித்துக் கொண்டிருக்கிறார். அப்போது அங்கிருந்த காணிக்கைப் பெட்டியில் பலர் வந்து காணிக்கைகளைப் போடுகின்றனர்.

இயேசு அதைப் பார்க்கிறார். **'அவர் கண்ணேறிட்டுப் பார்க்கின்றபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார். ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசுகளைப் போடுகிறதையும் கண்டு இந்த ஏழை விதவை மற்றெல்லோரையும் பார்க்கிலும் அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்... என்றார்'** என லூக்கா 21:1-4ல் எழுதப்பட்டு இருக்கிறது.

காணிக்கை செலுத்துவதும், தசம பாகம் கொடுப்பதும் கிறிஸ்தவர்கள் மேல் விழுந்த தலையாய கடமை அது. காணிக்கையை நாம் திருச்சபை போதகருக்கு கொடுக்கிறோம் என்று எண்ணாமல்அதை கர்த்தருக்கு கொடுக்கிறோம் என்கிற எண்ணத்தில் கொடுக்க வேண்டும். காணிக்கை கர்த்தருக் குரியது. மல்கியா 3:8ஐ எடுத்து வாசியுங்கள். **'நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். தசம பாகத்திலும், காணிக்கைகளிலும் தானே'** என்று ஆண்டவரே சொல்லுகிறார். நாம தசமபாகம், காணிக்கையை முழுமையாகக் கொடுக்கலைன்னா ஆண்டவரையே நாம ஏமாற்றுகிறோம். நாம ரெகுலரா போற திருச்சபைக்கும் கொடுக்கணும். கிராமங்களில் மிகவும் கஷ்டப்பட்டு ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களுக்கும் கொடுக்கணும். வட இந்திய மாநிலங்களில் ஊழியம் செய்கின்ற மிஷனெரிகளுக்கும் கொடுக்கணும்.

நம்ம சபையிலேர்ந்து மிஷனரிகளை சப்போர்ட் பண்றாங்கன்னா, திருச்சபை மூலமாகவே இந்த உதவிகளைச் செய்யுங்க. இன்னிக்கு இயேசு கிறிஸ்துவை ஒரு வியாபாரப் பொருளாக ஆக்கி விட்டனர். இயேசுவின் பெயரில் ஊழியத்தைச் சொல்லி எப்பப்ப பார்த்தாலும் காணிக்கை அனுப்புங்க, ஐந்து அப்பம், இரண்டு மீன், பங்காளர் திட்டம், ஆண்டவர் என்னை ஸ்கூல் ஆரம்பிக்கச் சொன்னார், 20,000 பேர் அமர்ந்து ஆராதிக்கும்படியா ஒரு ஜெபக் கூடம் கட்றோம்.அதுக்கு ஒரு ஸ்கொயர் அடிக்கு இவ்வளவு கொடுங்க, அப்படி கொடுத்ததுனால நான் என் வீட்டைக் கட்ட ஆண்டவர் ஆசீர்வதிச்சார். அப்படீன்னெல்லாம் சாட்சி சொல்லி எழுதி, டி.வி.யில விளம்பரம் பண்ணி ஜனங்கள் கிட்ட இருந்து காணிக்கைகளைக் கறந்து இன்று கோடீஸ்வரராக இருக்கிற எத்தனையோ ஊழியக்காரங்க இருக்கிறாங்க.

அதெல்லாம் பார்த்து ஏமாந்து போயி அவங்களுக்கெல்லாம் பணம் அனுப்பக் கூடாது. 10,000, 20,000 பேர் அமர்ந்து ஆராதிக்கிறதுக்குப் பதிலா 100, 200 பேர் ஆராதிக்கிறதுக்கு சபைகளே இல்லாத கிராமங்கள்ல சபைகளை கட்டலாமே. அதுக்கு நாம உதவலாமே. கிறிஸ்துவை வச்சு வியாபாரம் பண்ற ஊழியங்களுக்கு உதவாம, உண்மையிலேயே கஷ்டப்படுகிற ஊழியங்களை நாம தாங்கணும்.

நாம கொடுக்கிற ஒவ்வொரு காணிக்கையையும் ஆண்டவர் பாக்குறார். நாம எவ்வளவு கொடுக்கிறோம், தசம பாகம் கொடுக்கிறோமோ? அதிலும் வஞ்சகம் பண்றோமா? என்ன மனநிலையில கொடுக்கிறோம்னு எல்லாத்தையுமே பாக்குறார். அந்த ஏழை விதவை இரண்டே இரண்டு பித்தளைக் காசுகள்தான் போட்டாள். அதுதான் அவளோட சொத்தே. அவகிட்டே இருந்த அந்த முழுச் சொத்தையுமே ஆண்டவருக்கு கொடுத்திட்டா... நாம எவ்வளவு கொடுத்தோம்கிறது முக்கியம் இல்ல. என்ன மனநிலையில் கொடுத்தோம்னு ஆண்டவர் பார்க்குறாரு.

ஆண்டவருக்கு **'உற்சாகமாக கொடுக்கணும். உற்சாகமாகக் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாக இருக்கார்'**னு 2 கொரி 9:7ல் பாக்குறோமே. **'திருவசனத்தை உபதேசிக்கிறவனுக்கு உபதேசிக்கப் படுகிறவன் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக் கடவன்னு'** கலா 6:6 சொல்லுது. **'இந்த காணிக்கையை கர்த்தருடைய ஆலயத்துக்கு கொண்டு வரத் தொடங்கிய நாட்கள் முதலாக நாங்கள் சாப்பிட்டு திருப்தி அடைந்தோம். இன்னமும் மிச்சம் இருக்கிறது'**ன்னு 2 நாளா 31:10ல் சாட்சி கூறப்பட்டு இருக்கே. ஆண்டவருக்கு கொடுத்துப் பாருங்க, அதுக்கப்புறம் பாருங்க உங்க நிலைமையை.

கர்த்தர் திரும்பி பேதுருவை நோக்கிப் பார்த்தார். சேவல் கூவுவதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவு கூர்ந்து வெளியே போய் மனங்கசந்து அழுதார்' என்று லூக்கா 22:61, 61ல் கூறப்பட்டு இருக்கிறது. நாமும் இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவருடைய திருக்கரங்களில் இருந்து எண்ணி மாளாத அற்புதங்களை அதிசயங்களைப் பெற்றுள்ளோம். இதை எத்தனை பேர்களிடம் வெளியே போயி சாட்சியாக சொல்லியிருக்கிறோம்?

இயேசுவைப் பற்றி சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லாமல் இருக்கிறதும் அவரை மறுதலிப்பதற்கு சமமே. அப்படி எத்தனை இடங்களில் நாம் சுவிசேஷத்தை அறிவிக்காமல் இருந்திருக்கிறோம். அது ஒரு நன்றி மறந்த செயல் அல்லவா? நாம கிறிஸ்துவுக்குள்ள வந்தப் பிறகு எத்தனை பேர் கிட்டே இயேசுவைப் பத்திக் கூறி அவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தியிருக்கிறோம்? இயேசுவை அறியாத ஜனங்களுக்கு இயேசுவைப் பற்றி நாம் சொல்லணுமே. **'அவரை விசுவாசியாதவர்கள் அவரை எப்படித் தொழுது கொள்வார்கள்? பிரசிங்கிக்கிறவன் இல்லாவிட்டால் அவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்?'**ன்னு ரோமர் 10:13ல சொல்லப்பட்டு இருக்கே. **'கர்த்தரைத் துதித்து அவருடைய நாமத்தை மகிமைப் படுத்துங்கள். அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள்'**னு சங்கீதக்காரன் 105:1ல சொல்லுகிறதை நாம செய்யலையேங்கிறதை உணர்ந்து உடனே இப்பவாவது நாம செயலில் இறங்கணும்.

உனக்காக மரித்தேன். உன் பாவங்களுக்காக சாபங்களுக்காக, மீறுதல்களுக்காக, நான் நொறுக்கப்பட்டேன். நீ எனக்காக என்ன செஞ்சிருக்கேன்னு ஆண்டவர் கேட்டா நாம என்ன பதில் சொல்லப் போறோம்?

'இயேசுவைப் பிடித்துக் கொண்ட மனுஷர் அவரைப் பரிகாசம் பண்ணி, அடித்து அவருடைய கண்களைக் கட்டினார்கள்' என்று லூக்கா 22:63, 64ல் எழுதப்பட்டு இருக்கிறது. இந்த கொடுமையை செய்தது பிரதான ஆசாரியரின் ஆட்களும், ரோமப் போர்ச் சேவர்களும் மட்டுமல்ல.நாமும்தான் இயேசுவைப் பிடித்துக் கொண்டோம். நான் பரிசுத்தர். நீங்களும் பரிசுத்தராய் இருங்கள் என்று இயேசு சொன்னார்.

ஆனா நாம எப்படி இருக்கோம்? **'புறஜாதி மக்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றின் நிமித்தம் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படி நல் நடக்கை உள்ளவர்களாக நடந்து கொள்ளுங்கள்'** என்று 1 பேதுரு 2:11, 12ல சொல்லப்பட்டு இருக்கே. கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படி நடந்து கொள்கிறோமா? இல்லை தூஷிக்கும்படியாகவா? புறஜாதி மக்கள் கர்த்தரைத் தூஷித்து பரிகாசம் பண்ணும்படியாகவல்லவா நாம் நடந்து

கொள்ளுகிறோம். கிறிஸ்தவர்களைக் குறித்து புற ஜாதி மக்கள் சொல்லுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் ஆண்டவரை அடித்துத் துன்புறுத்தி, அவருடைய கண்களைக் கட்டுவதற்கு சமமல்லவா? பரிசேயர்கள், வேத பாரகரை விட, இயேசுவை கொடுமைக்கு ஆளாக்கிய பிரதான ஆசாரியர்களை விட நாம எந்த விதத்தில் சிறந்தவர்களாய் இருக்கிறோம்?

தியானமும் ஜெபமும்

மகா இரக்கமுள்ள என் இயேசுவே! நான் உமது சரீரத்தில் உள்ள அங்கங்கள் ஒவ்வொன்றையும் தியானிக்க தியானிக்க உமது மீதுள்ள என் பாசமும் நேசமும் பெருகிறது. உலகப் பிரகாரமான இச்சைகள், ஆசைகள், வேட்கை, பற்று எல்லாம் குறைகிறது. பேதுருவை இரட்சிக்கும்படிக்கு உமது கண்களை அவர் மீது திருப்பி நோக்கினீர். பேதுருவின் குறைகள் உமக்கு மறைவாக இருக்கவில்லை. இதை நீர் பேதுருவுக்கும் உணர்த்தி, அவரை செய்த தவறுக்கு அழ வைத்து மனந்திரும்ப வைத்தீர். உமது கண் பார்வை இருதயத்தை ஊடுருவிப் பார்க்க வல்லது. என்னையும் நீர் ஏறெடுத்துப் பாரும். என் குறைகளை எனக்கு உணர்த்தும். அவைகளை நான் உணர்ந்து மனங் கசந்து அழ வேண்டும்.நான் திருந்த வேண்டும் சுவாமி. நான் இனியும் பாவச் சேற்றில் உழன்று கொண்டிருக்க விரும்பவில்லை. என்னைத் தூக்கி விடும். உமது கண் பார்வையிலேயே என்னை வைத்திடும்.

உமது ஊழியத்திற்கென்று, உமது இராஜ்யம் கட்டப்படுவதற் கென்று அள்ளி அள்ளிக் கொடுக்கும் வசதி வாய்ப்பை எனக்குத் தாரும். என் குறைகளை, மீறுதல்களை எனக்குச் சுட்டிக் காட்டி உணர்த்தும். உமது பூரண கண்ணினால் இந்த அடிமையை நீர் நோக்காவிட்டாலும், உமது கடைக் கண்ணினால் நீர் நோக்கினாலும் போதும் அய்யா. நான் பிழைத்துக் கொள்வேன். இயேசுவே, என்னைப் பாரும். இரட்சகரே, என்னை நோக்கிப் பாரும். இயேசுவே என்னைப் பாரும்.பாவப்பரிகாரி இயேசுவின் நாமத்தில் கேட்கிறேன். ஜெபம் கேளும் எங்களை அதிகமாக நேசிக்கின்ற எங்கள் பரலோக பிதாவே! ஆமென்!

தியானம் - 23

திரியேசு தேவனின் திவ்ய திருமுகம்
(பாகம் 1)

திரியேசு தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் திவ்ய முகத்தின் அழகுக்கு, திருமுகத்தின் தெய்வீக ஒளிக்கு ஈடு இணை எதையுமே கூறமுடியாது. அது சூரியனைப் போல் பிரகாசித்தது. **'இயேசு பேருதுவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக் கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின் மேல் போய் அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப் போல் பிரகாசித்தது'** என்று வேதம் கூறுகிறது. அந்த உயர்ந்த மலை தாபோர் மலை. இயேசு கிறிஸ்து தம்முடைய இயல்பான சத்திய ஒளியை வீசும் முகச் சாயலை ஒரே ஒரு தரம் மோசேக்கு காட்டினார். அந்த சாயலின் மகிமை மோசேயின் முகத்திலும் பிரகாசித்தது. (யாத் 34: 33-35). ஜனங்கள் அதைக் கண்டு பயந்ததினால் மோசே தன் முகத்தை மூடிக் கொண்டார். ஏசாயா தீர்க்கதரிசி இயேசுவின் முகத்தின் வெளிச்சத்தைக் கண்டு **'ஐயோ அதமானேன்'** என்று அழுதான்.

இயேசு கிறிஸ்துவினுடைய முகத்தில் காணப்பட்ட ஒளி சாதாரணமானது அல்ல. அது தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தும் அறிவின் ஒளியாக இருந்தது. நம்முடைய மாமிச ஊனக் கண்களுக்கும், மனதுக்கும் எட்டாத தேவ மகிமையும், தேவனைப் பற்றிய மெய் அறிவும், கிறிஸ்துவின் முக அழகாக, ஒளியாக இருந்தது. இதையே பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார்.2 கொரி 4:6ல் **'இருளிலிருந்து வெளிச்சத்தை பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியை தோன்றப் பண்ணும் பொருட்டாக எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்'** என்று. ஆம் நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவர் காட்டிய வழியில் தவறாமல்

நடக்கும் போது, இருண்டு போய் கிடக்கும் நம் வாழ்விற்கும், இருதயத்திற்கும் தேவ மகிமையின் ஒளி பிரகாசிக்கும். பாவ இருள் நீங்கும்.

இயேசு கிறிஸ்து எடுத்துக் கொள்ளப்படும் நாட்கள் சமீபத்தபோது, அவர் எருசலேமுக்குப் போகும் போது தமது முகத்தை திருப்பினார் என்று லூக்கா 9:51ல் எழுதப்பட்டு இருக்கிறது. இயேசு கிறிஸ்துவை ராஜாவாக்கும்படி ஜனங்கள் திரண்டு வந்தபோது அவர் மலையின் மேல் ஏறி மறைந்து கொண்டார்.

பட்டம் பதவி, பெருமை, புகழ் எல்லாம் வந்த போது கிறிஸ்து அவைகளுக்கு விலகி ஓடி மறைந்து கொண்டார். எருசலேமுக்கு போனால் அங்கே என்ன என்ன பாடுகளை அனுபவிக்க வேண்டி வரும் என்று அவருக்கு மிக நன்றாகத் தெரியும். அதை அவரே தன் வாயினால் பலமுறை கூறியிருக்கிறார். படப் போகும் பாடுகளை எண்ணி பயப்படவில்லை. தயங்கவில்லை. அவைகளை விட்டு விலகி ஓடிவிடவில்லை. மாறாக அவைகளை எதிர்கொண்டு சந்திக்க தானாகவே சென்றார். கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு மலர்ப்படுக்கை அல்ல. கரடு முரடான இறுக்கமான, நெருக்கமான பாதைதான். அதில் நம் சிலுவையை சுமந்து கொண்டுதான் சென்றாக வேண்டும்.

நம்மை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என அனைவருமே வெறுத்து ஒதுக்குவார்கள். நிந்தனை செய்வார்கள். மனம் புண்படும்படி பேசுவார்கள். நமக்கு பாடுகள் உண்டு. இருந்தாலும் இயேசு இந்த உலகத்தை, மரணத்தை ஜெயித்தார், சாத்தானை வென்றார், அவர் நம்மோடு இருக்கிறார். ஊழியத்தின் பாதையில் உபத்திரவங்கள் இருக்கிறது. தயங்காதே. பாடுகளைப் பார்த்து பயப்படாதே. தூஷணைகளைக் கண்டு துவண்டு போகாதே. இயேசு கிறிஸ்துவை முன் நிறுத்தி அவர் பின்னே நெஞ்சை நிமிர்த்தி ஒரு போர் வீரனைப் போல் செல்.

தியானமும் ஜெபமும்

எங்களை ஆட்கொண்ட எங்கள் அன்பு நேசரே! இருளடைந்து போயிருக்கும் எங்கள் இருதயத்தில் உமது முகத்தின் திவ்ய தெய்வீக ஒளியை பரவி எங்கள் வாழ்வை ஒளி மயமாக்க ஒப்புக் கொடுக்கிறோம் சுவாமி. சீனாய் மலையிலும், தாபோரிலும் உமது மகத்துவமான மகிமையோடு வெளிப்பட்டீர். அந்த மகிமையை நீர் இப்பூமியில் வாழ்ந்த நாட்களிலெல்லாம் காட்டியிருந்தால் ஒருவரும் உமது அருகில் வரவே அஞ்சியிருப்பார்கள் என்றுதான் அந்த மகிமையை மறைத்து வாழ்ந்தீரோ? உம்முடைய சுயரூபத்தைக் கண்டால் மனிதர்கள் அண்டாமல் அஞ்சி நடுங்குவார்கள் என்பதினால் அடிமையின் ரூபம் நீர் எடுத்தீரோ?அதனால்தான் மனிதனாய் பிறக்க நீர் கன்னி மரியாளின் கர்ப்பத்தில் வந்தீரோ?

நீர் தாபோரில் காண்பித்த தேவசாயலைக் கண்ட யோவான் **'அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது'** என்று சொல்லிய வசனம் (யோ 1:14) உம்மையும் பிதாவையும் ஒரே ஸ்தானத்தில் ஒன்றாக காணும்படியாக கிருபையாய் இருந்தது. தாபோரின் மகிமையைக் காணும் சக்தி எனக்கு இல்லை தகப்பனே. எனக்கு உமது கொல்கதாவின் காட்சியை மறவாதிருக்கும் வரம் தாரும். அது என்னைப் பண்படுத்தும். பாவம் செய்யாமல் என்னைத் தடுத்தாட்கொள்ளும்.

அனுபவிக்கப் போகின்ற சிலுவைப் பாடுகள் உமக்கு மிக நன்றாகத் தெரிந்திருந்த போதிலும் அவைகள் உம்மை, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகின்ற கடமையைச் செய்ய தடையாக இருக்கவில்லை.உம்முடைய உறுதியை, எடுத்த முடிவை தளரச் செய்யவில்லை. பாடுகளை தைரியமாக எதிர் கொள்ள நீரே முன் சென்றீர். இப்பேர்பட்ட ஒரு மன தைரியத்தை, உறுதியை எனக்குத் தாரும். உம்மை அறிந்த ஒவ்வொருவருக்கும் தாரும். சுவிசேஷத்தை தயங்காமல் அறிவிக்கும் தைரியத்தைத் தாரும்.

என்னை வாழ வைக்கும் வள்ளலே!உம்முடைய திருமுக தரிசனம், அந்த தரிசன மகிமை என்னை விட்டு விலகாதிருக்கும்படி கெஞ்சுகிறேன் பிரபு. திருமுக அறிவின் மகிமையுள்ள ஒளி என் இருதயத்தின் இருளை நீக்கி ஒளி பாய்ச்ச வேண்டுமாய் வேண்டுகிறேன் சுவாமி. உம்முடைய திரு முகத்தை என்னை விட்டு விலக்காதிரும். மீட்பரும் இரட்சகரு மாகிய இயேசு கிறிஸ்துவின் திவ்ய நாமத்தில் கேட்கிறேன். இந்த ஜெகத்தை ஆளும் ஜெகோவா தேவனே! ஆமென்!

தியானம் 24

திரியேக தேவனின் திவ்ய திருமுகம்

(பாகம் 2)

மத் 26:39ல் **'இயேசு கெத்சமனே எனப்பட்ட இடத்திற்கு வந்து முகங்குப்புற விழுந்து.. ஜெபம் பண்ணினார்'** என்று பார்க்கிறோம். சர்வ லோகத்தையும் படைத்த அந்த சர்வேஷ்வரனே முகங்குப்புற சாஷ்டாங்கமாக விழுந்து ஜெபம் பண்ணுகிறார். ஆனால் நமக்காக மரித்த தேவனை குரலை உயர்த்தி ஆண்டவர் செய்த நன்மைகளை நினைத்து, சொல்லிச் சொல்லி நன்றி பலி ஏறெடுக்க நமக்கு தயக்கம். சத்தமாக பாட, துதிக்க, ஆராதிக்க, கரங்களைத் தட்டி ஆர்ப்பரித்துப் பாட வெட்கப்படுகிறோம். முழங்கால் படியிட முடிந்தாலும், இருந்த இடத்திலேயே தலை கவிழ்ந்து ஜெபித்து விட்டு வந்து விடுகிறோம். ஜீவனுள்ள தேவனை, நம்மைக் காண்கின்ற தேவனை இப்படி ஏனோதானோ என்று ஆராதிக்கிறோம்.

ஆனால் கல்லையும், மண்ணையும், சிலையையும் கும்பிடுகிறவர்கள் எப்படி ஆராதிக்கின்றனர் என்று பாருங்கள். காலில் செருப்பு இல்லாமல் கொதிக்கிற வெயிலில் தார் ரோட்டில் வெறும் காலோடு பல மைல்கள் நடந்து வந்து ஆராதிக்கின்றனர். விரதம் இருந்து பய பக்தியோடு வருகின்றனர், தீ மிதிக்கின்றனர். உடம்பில் அலகு குத்திக் கொள்கின்றனர்.அங்கப் பிரதோஷணம் வருகின்றனர்.சாஷ்டாங்கமாக தரையில் முகங்குப்புற விழுந்து

கும்பிடுகின்றனர். அவர்கள் ஆராதிக்கின்ற, பக்தி வைத்த இடம் தப்பாக இருக்கலாம். ஆனால் அவர்களின் பக்தியை, பய பக்தியைப் பாருங்கள். ஆனால் நாம் எப்படி ஆராதிக்கிறோம்? இயேசுவே முகங் குப்புற விழுந்து ஜெபம் செய்கிறார். ஆனா நாம்? திருவசனத்தை கேக்கிறதுனாலேயோ படிக்கிறதுனாலேயோ நாம் நீதிமான்கள் ஆக்கப்படப் போறது இல்லை. அதன் படி நடக்கின்றவர்களே நீதிமான்கள் ஆக்கப்படுவார்கள்.

இயேசுவின் திருமுகம் மூடப்பட்டது. **'அப்பொழுது சிலர்..அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும் தொடங்கினார்கள்'** என்று மாற்கு 14:65 கூறுகிறது. பிரதான ஆசாரியனுடைய அரண்மனையில் இயேசுவின் கண்கள் கட்டப்பட்டன என லூக்கா சொல்கிறார் (லூக்கா 22:64). மாற்கு முகத்தை மூடினார்கள் என எழுதுகிறார். இரண்டுமே நடந்திருக்கலாம். சத்துருக்கள் முதலில் இயேசுவின் முகத்தை ஒரு துணியால் மூடி அவரை அடித்த பின்பு, அந்த துணியின் இடைவெளி மூலமாக அவர் தமக்கு செய்யப்படும் அக்கிரமங்களை அறிந்து கொள்ளாதபடிக்கு அப்புறம் கண்களைக் கட்டியும் இருக்கலாம்.

இயேசுவைப் பிடித்துக் கொண்ட மனிதர்கள் **'அவரைப் பரிகாசம் பண்ணி, அடித்து, அவருடைய கண்களைக் கட்டி அவருடைய முகத்தில் அறைந்து, அநேக தூஷண வார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள்'** என்று லூக்கா 22:63-65ல் எழுதப்பட்டு இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் திருமுகத்தில் சத்துருக்கள் ஈவு இரக்கமின்றி அறைந்தார்கள். மத் 26:67ல் இயேசுவின் கன்னத்தில் அறை விழுந்தது என்று பார்த்தோம்.இப்போது அவர் முகத்தில் அறைந்தார்கள் என்று பார்க்கிறோம். இந்த இரண்டும் ஒன்றல்ல, கிறிஸ்துவின் கண்களைக் கட்டி முகத்தை மூடுவதற்கு முன்பாக கன்னத்திலும், கண்கள் கட்டப்பட்டு முகம் மூடப்பட்ட பின்பு முகத்திலும் அடித்தார்கள் என்றே சொல்லலாம்.

கடைசியாக இயேசுவின் திருமுகத்தில் நினைக்கவே நடுக்கம் வருகின்ற ஒரு அநியாயமான நிந்தை நடந்தது. அந்த நிந்தையை விவரித்துச் சொல்லவும் முடியவில்லை. வாயில் வார்த்தைகள் வர மறுக்கின்றன. கொடுமை..கொடுமையிலும் கோரக் கொடுமை அது. மத் 26:27 வசனத்தை படியுங்கள். மத்தேயு எப்படித்தான்

எழுதினாரோ? தெரியவில்லை. அழுது கொண்டே கண்ணீரினால் எழுதியிருப்பார் என எண்ணுகிறேன். **'அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்'** ஐயோ.. பாவிகளே! உங்களுக்கு எப்படி மனம் வந்தது இந்த கொடுமையை செய்ய? அப்படி அவர் என்னப்பா தப்பு செய்து விட்டார்? இரக்கமில்லாத கல் நெஞ்சம் படைத்த பாவிகளே! நீங்கள் செய்த கொடுமைகளை இயேசு ஒருவேளை மன்னித்து மறந்து விடலாம். ஆனால் பிதா உங்களை மன்னிக்கவே மாட்டாரே.

செய்த கொடுமைகளுக்காக எரிநரகம், அக்னிக் கடல், உங்களுக்குக் காத்திருக்கிறது. அதுவரை அதள பாதாளத்தில் வெந்து நொந்து கந்து கந்தாகுங்கள். அவர்களா செய்தார்கள்? இல்லை, நம்முடைய பாவங்களே, அக்கிரமங்களே அவர்களை அப்படிச் செய்யத் தூண்டியது. நாம்தான் காரணர்கள். அதை மறந்து யாரையோ குற்றம் கூறிக் கொண்டு இருக்கிறோம். எய்தவன் நாம் இங்கே இருக்க,எய்த அம்பை நோவானேன்? அதனால்தான் ஏசாயா தீர்க்கதரிசி ஏசாயா 50:6ல் **'அவர் தமது முகத்தை உமிழ் நீருக்கு மறைக்க மாட்டார்'** என்று எழுதினாரோ? பரி. மாற்கும் 10:34ல் **'இரட்சகர் கடைசியாக எருசலேமுக்குப் போகையில் தமக்கு நேரிடும் பாடுகளில் துப்பப்படுதலும் ஒன்று'** என்று சொன்னார். பிரதான ஆசாரியர் வீட்டில் முகத்திலும், பிலாத்துவின் அரண்மனையில் அவர் மேலேயும் துப்பப்பட்டாரே.

தியானமும் ஜெபமும்

என்னை இரட்சித்த என் பரமதேவனின் திருமுகம் முகங்குப்புற மண்ணில் கிடக்கிறது. உமது முகமெல்லாம் மண்ணும், தூசியும், சேறுமாக இருக்கிறது. நான் செய்த பாவங்கள், அக்கிரமங்கள் எல்லாம் பாவச் சேறாகி, புழுதியாகி நீர் படைத்த புனித பூமியையே தீட்டாக்கி விட்டது. மனிதர்கள் அனைவரின் பாவங்களும் ஒன்று சேர்ந்து, இந்த பூமி ஒரு பாவக் குட்டையாக, புதை மணலாக மாறி விட்டது. பாவம் நிறைந்த பூமியை உமது திருமுகத்தால் தொட்டு புனிதப்படுத்துகின்றீரோ? உமது முகம் அடிக்கடி மூடப்படுகிறது. முகத்தை மூடி விட்டால் உமக்கு ஒன்றும் தெரியாது என்று சத்துருக்கள் நினைக்கிறார்கள்.

பூனை கண்களை மூடிக் கொண்டால் உலகமே இருண்டு விட்டது என்று அர்த்தமா என்ன? உமது முகத்தை மூடி

விட்டாலும், உமது ஞானக் கண்கள் இந்த உலகம் முழுக்க உலா வந்து கொண்டிருக்கிறதே. அந்தக் கண்களுக்கு மறைவானது ஒன்றுமில்லையே... தாபோரில் காட்டிய முக ரூபத்தை நீர் இப்போது காட்டாததும் நன்மைக்குத்தான். அதுவும் எனக்காகத்தான். ஆம், கிறிஸ்துவின் முக தேஜசை, அந்த சூர்ய பிரகாசத்தை சத்துருக்கள் கண்டிருந்தார்களேயானால், அவர்கள் பயந்து நடுங்கி, அவரை சிலுவையில் அறையாமல் விட்டிருப்பார்கள்.அப்படி விட்டிருந்தால் என் பாவமும், இந்த உலகத்தார் பாவங்களும் மன்னிக்கப்பட்டு இருக்காதே. சர்வலோக இரட்சிப்பு, தேச சித்தம் நிறைவேறியிருக்காதே. நாம் அனைவரும் நமது பாவங்களில் சாக வேண்டியிருந்திருக்குமே.

எங்களின் பாவங்களுக்காக பாடுகளை ஏற்று, இரத்தம் சிந்தி மரித்து உயிர்த்தெழுந்த என் உயிரினும் மேலான என் தேவனே! இரத்தமும் எச்சிலும் வடியும் உமது திருமுகத்தை கொஞ்சம் குனிந்து எனக்குக் காட்டும்.அதை நான் முத்தமிடுகின்றேன். யூதாசைப் போல உம்மை முத்தமிட்டு உம்மைக் காட்டிக் கொடுக்க அல்ல. என் பாவங்கள் எல்லாம் என்னை விட்டு அகல, வெட்கப்பட்டு ஓட, நீர் ஒருவரே என் இரட்சகர்,இந்த உலக இரட்சகர் என்று இந்த உலகத்துக்குக் காட்ட முத்தமிட வருகிறேன். உமது திருமுகத்தை திருப்பாமல் எனக்குக் காட்டும். இரட்சியும், இரட்சிக்க வல்ல ஒரே தேவனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கெஞ்சுகிறேன். ஜெபம் கேளும். எங்களுக்கு இரட்சகரைத் தந்த எங்கள் இணையில்லா பிதாவே! ஆமென்!

தியானம் - 25

சீர்மிகு தேவனின் சிறப்புமிகு சிரசு

(பாகம் 1)

இயேசு கிறிஸ்துவினுடைய சிரசின் மேல் பரிமள தைல அபிஷேகம் செய்யப்பட்டது. முன்பு ஒரு ஸ்திரீ கிறிஸ்துவினுடைய பாதத்தில் பரிமளத் தைலம் பூசி அதை முத்தமிட்டாள் என்று லூக்கா 7:37, 38ல் பார்த்தோம். இப்பொழுது அவரது சிறப்பு

மிகு சிரசு அபிஷேகம் பெறுகிறது. **'இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாக இருந்த சீமோன் வீட்டிலே போஜன பந்தியிருக்கையில் ஒரு ஸ்திரீ விலையேற்றப்பட்ட நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள்'** என்று மாற்கு 14:3ல் எழுதப்பட்டு இருக்கிறது.

திருப்பாத அபிஷேகம் கிறிஸ்துவின் ஊழியத்தின் முதலாம் வருஷத்திலும், சிரசாபிஷேகம் அவர் பாடுபடுவதற்கு நான்கு நாட்களுக்கு முந்தியும் நடந்தது. பாதாபிஷேகம் செய்தவள் ஒரு தயவு வேண்டுமென்று விண்ணப்ப முறையாக செய்தாள். சிரசாபிஷேகம் செய்தவள் ஒரு தயவு பெற்றதை முன்னிட்டு, ஸ்தோத்திர முறையாகச் செய்தாள். பிதாவாகிய தேவன் தமது குமாரனை பரிசுத்த ஆவியாகிய ஆனந்த தைலத்தால் அபிஷேகம் செய்தார். சங் 45:7 யோவான் ஸ்நானன் அவரை யோர்தானின் ஜலத்தால் அபிஷேகம் செய்தார். பாவியான ஸ்திரீயும், மரியாளும் கிறிஸ்துவை நளத தைலத்தால் அபிஷேகம் செய்தனர்.

இந்த வர்னத்தையும் பூமியையும் இந்த பிரபஞ்சத்தையும் ஒரே ஒரு வார்த்தையினால் படைத்த இந்த சர்வ வல்ல தேவனுக்கு தலை சாய்க்க இடம் இல்லை. அதை ஆண்டவரே கூறுகிறார். லூக்கா 9:57, 58 ஐப் பாருங்கள். அவர்கள் வழியிலே போகையில் ஒருவன் அவரை நோக்கி, **'ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான். அதற்கு இயேசு நரிகளுக்கு குழியும், ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு. மனுஷ குமாரனுக்கோ, 'தலை சாய்க்க இடமில்லை'** என்றார். அவர் பிறந்த நாளிலே சத்திரத்தில் அவருக்கு இடம் இல்லாதிருந்தது. - லூக்கா 3:7. அவர் வளர்ந்த நாசரேத்திலும் அவருக்கு இடம் இருக்கவில்லை. - லூக்கா 4:29. அவர்கள் அவரை ஊரை விட்டுத் துரத்தினார்கள். இயேசு அநேக அற்புதங்களைச் செய்த கப்பர் நகூமிலும் அவருக்கு இடம் இருக்கவில்லை.

அவர் 5000 பேரைப் போஷித்த உடனே அவரை ராஜாவாக்க வந்தவர்கள் கடிந்து கொள்ளப்பட்ட உடனே அவர்கள் அனைவரும் அவரை விட்டு பின்வாங்கிப் போனார்கள் - யோ 6:66. கதரேனர் நாட்டிலும் அவருக்கு தங்க இடமில்லாமல் போயிற்று. அவர்கள் இயேசுவை தங்கள் எல்லையை விட்டு ஓடிப்

போகச் சொன்னார்கள். - லூக்கா 8:37. நியாயஸ்தலங்களிலேயும் அவருக்கு இடம் இருந்தது இல்லை. இவனை அகற்றும் இவனை அகற்றும் என்று கூக்குரலிட்டனர். - யோ 19:15. இயேசுவுக்கு இடம் இல்லாததால் அடிக்கடி வனாந்திரமான இடத்துக்கு போனதாக வாசிக்கிறோம். மாற்கு 1:35, 6:31.

அவர் கூடவே இருந்த யோவான் கடைசியில் எழுதுகிறார். **'பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.இயேசு ஒலிவ மலைக்குப் போனார்'** என்று சொல்லி முடிக்கிறார் - யோ 7:53: 8:1. எருசலேமில் எல்லோருக்கும் இடம் இருந்தாலும் இயேசுவுக்கு இடம் இல்லாததால் பகல் நேரத்தை எருசலேமிலும், இரவை ஒலிவ மலையிலும் கழித்தார் என லூக்கா 21:37ல் பார்க்கிறோம். அவர் பஸ்காவை ஆசரிக்கவும் இடம் தேட வேண்டியதாயிற்று - மாற்கு 14:14.அவர் மரித்த பின்பும் அரிமத்தியா ஊர் யோசப்பின் கல்லறையே அவருக்கு இரவல் இடமாக இருந்தது. மெய்யாகவே அவருக்கு தலை சாய்க்க இடமில்லை என்று சொன்னது சரிதான்.

தியானமும் ஜெபமும்

உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து நளது என்னும் பரிமள தைலத்தால் அபிஷேகம் பெற்றார். இந்த நளது என்ற செடி இந்துகுஷ் மலையடிவாரத்திலும் கங்கை நதி கரையோரங் களிலும் வளர்கின்ற ஒரு வித மருந்துச் செடி என்று பூதத்துவ நிபுணர்களும், சித்த, மூலிகை வைத்தியத்தில் தேர்ந்த வல்லுனர்களும் சொல்லியிருப்பது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நமது தேச மண்ணில் விளைந்த ஒரு வித செடியிலிருந்து தயாரிக்கப்பட்ட பரிமளத்தைலம் தேவாதி தேவனின் சிரசில் அபிஷேகமாக வார்க்கப்பட்டது.

நமது தேச மக்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் தலையில் ஆனந்தத் தைலமாய் ஊற்றப்பட வேண்டும். பாரத தேசம் 'நீ இப்பூலோகத்திலுள்ள அநேக தேசங்களில் பாக்கியம் பெற்றது. உன் மண்ணின் சாரம் ஒருநாள் நம் இரட்சகரை மகிழச் செய்தது. உன் தேசத்தின் விக்கிரஹ ஆராதனைப் பாவங்கள் மற்றும் அனைத்துப் பாவங்களையும் நளது தைலமாக பாபநாசரின் தலையில் வார்க்கப்பட்டாயிற்று.

என் தேவனே! என் தேசத்தை கண் நோக்கிப் பாரும். எனது தேசத்திற்காக உமது கண்களில் இரக்கம் பிறக்க வேண்டுமாய் ஜெபிக்கிறேன் தகப்பனே.

என் தேவனே! நீர் எங்கும் செல்ல வேண்டாம்.என் இருதயத்தில் வந்து தலை சாயும். என் உள்ளத்தில் வந்து தங்கி இரும். நீர் பெர்மனென்ட்டாக வந்து குடியிரும். அது எனக்குக் கிடைக்கும் பெரும் ப்ர்க்கியமாக இருக்கும். ஒரு சாட்சியுள்ள கிறிஸ்த வாழ்க்கை வாழ்ந்து சுகந்த மணம் வீசும்படியாக, ஒரு நற்கந்த பரிமளத் தைலமாக என் வாழ்வை மாற்றும்.

வானாதி வானங்களும் கொள்ள முடியாத என் தேவனே! என் இருதய குடிலுக்குள் வாரும். வந்து தலை சாயும். கொந்தளிக்கின்ற என் பாவ ஆத்துமக் கடலில் வந்து நீர் படுத்தால் அது அடங்கி ஒடுங்கி விடும். உம்முடைய பரிசுத்த சரீரத்தால் என் பாவ சரீரம் சுத்தமாகும். உம்முடைய விலையேறப்பட்ட இரத்தத்தால் என் ஆத்துமா கழுவப்படும். வாருமய்யா வாரும், என் இரட்சகரே வாரும்.நீர் புகும் வீடும் சமாதானம் பெறும்.வாரும். வந்து என்னோடு எப்போதும் இரும். என்னைத் தேடி வந்து ஆட் கொண்ட என் தெய்வம் இயேசுவின் திருநாமத்தில் கேட்கிறேன், ஜெபம் கேளும். என் ஜீவனுள்ள பரலோக தேவனே! ஆமென்.

தியானம் - 26

சீர்மிகு தேவனின் சிறப்புமிகு சிரசு

(பாகம் 2)

இரட்சகராகிய கிறிஸ்துவின் சிரசு குறித்து இரண்டு குறிப்புகளை முந்திய அத்தியாயத்தில் தியானித்தோம். தற்போது மேலும் இரண்டு குறிப்புகளைக் குறித்து தியானிப்போமா?

இயேசு கிறிஸ்துவின் சிரசில் முள் முடி சூட்டப்பட்டது என்று பரிசுத்தவான் லூக்கா தவிர மற்ற மூன்று சுவிசேஷர்களுமே கூறுகின்றனர். **'போர் சேவகர்... முள்ளுகளினால் ஒருமுடியைப்**

பின்னி, அவர் சிரசின் மேல் வைத்து அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அந்தக் கோலை எடுத்து, அவர் சிரசின் மேல் அடித்தார்கள்' என்று மத் 27:27-30ல் பார்க்கிறோம். அவர் எனக்காக மனித அவதாரம் எடுக்கும்படியாக பரலோகத்தை விட்டு புறப்படும் போது வாசல் காக்கும் தூதன் எக்காளங்களை பலமாய் ஊதி, தங்களின் பொன் சுரமண்டலங்களால் **'சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பூமி அனைத்தும் அவரின் மகிமையில் நிறைந்திருக் கிறது'** என்று வாழ்த்தியதை என் ஆத்துமா கேட்டது.

அவர் சூரியனாய் என் விசுவாசக் கண்களுக்கு விளங்கினார், (வெளி 21:23) - அவர் மரியாளின் மாம்ச வாசலைக் கடந்து புறப்பட்டபோது பரலோக தூதர்கள் அனைவரையும் பூலோகத்தில் கண்டேன். இப்போது அவர் பிலாத்துவின் அரண்மனைக்குள்ளிருந்து வருகிறார். கூரிய நீளமான முட்கள் அவர் சிரசில் பல இடங்களிலும், நெத்தியிலும் குத்தி அதிலிருந்து இரத்தம் வடிய, அந்த இரத்தம் அவர் கண்களின் வழியாக வழிந்து முகத்தில் கோடு கோடாய் வழிய தட்டுத் தடுமாறி வெளியே வருகிறார்.

உடம்பில் சிகப்பு அங்கி, கையில் மூங்கில் தடி, சிரசில் முள்முடி, முகத்தில் உமிழ் நீர், ஐயோ இது என்ன கோலம்? அவரின் கோலத்தை என் கண் கொண்டு பார்க்க முடியாதபடி என் கண்களில் கண்ணீர் திரையிடுகிறது. என் ஆத்துமா அலறுகிறது. உடல் நடுங்குகிறது. எனது கால்கள் தடுமாறுகின்றன.

அவரின் முதுகிலும், கன்னத்திலும், முகத்திலும், அடிபட்ட தோடு தலையிலும் அடி பட்டார். செங்கோல் என்று பரியாசமாக யூதர் கொடுத்த அந்த நாணற் கோலையே பிடுங்கி முள் முடியின் மேல் அடித்து அழுத்துகின்றனர். அதோடு அநேகர் தங்கள் விரல்களை மடக்கி அவர் தலையில் குட்டுகின்றனர் - மாற்கு 14:65. இதையெல்லாம் ரோமப் போர் சேவகர்கள் செய்யவில்லை. நான் செய்த பாவங்களே அவரை அப்படி வாட்டி வதைத்தது. என் மண்டையில் இருந்த அக்கிரம சிந்தைகள், பாவ எண்ணங்களே முள் கிரீடத்தில் இருந்த கூரிய முட்களாக அவர் சிரசில் இறங்கியது.

கிறிஸ்துவை படாதபாடு படுத்தி, சித்திரவதை செய்து, சிலுவையிலும் அறைந்து அதில் தொங்கும் போது அவர்

அடைந்த ஆக்கினையின் முகாந்திரத்தைக் காண்பிக்கும் பொருட்டு, **'இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி அவர் சிரசுக்கு மேலாக வைத்தார்கள்'** என்று மத் 27:37ல் கூறப்பட்டு இருக்கிறது. இந்த வாசகம் நான்கு சுவிசேஷகர்களாலும் எழுதி வைக்கப்பட்டு இருக்கிறது. அவைகள் ஒன்றுக்கொன்று வார்த்தைகளில் சற்றே வித்தியாசப்பட்டாலும் பொருளில் ஒன்றுதான். இவர்களில் பரி. யோவான் எழுதியுள்ள வாசகமே பூரண வாசகம் என்று கூறலாம். அதாவது **'நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா'**, இந்த வாசகத்தில் நசரேயன், இயேசு ராஜா என்கிற இந்த மூன்று வார்த்தைகளும் விசேஷித்தவைகள். நசரேயன் என்கிற பதம் இரட்சகரின் தீர்க்கதரிசன வல்லமையை யும், இயேசு என்கிற பதம் அவருடைய ஆசாரியத்துவத்தையும், ராஜா என்கிற பதம் அவருடைய ராஜத்துவத்தையும் குறிக்கின்றன. நமது இரட்சகரின் முத்தொழிலும் சிலுவையின் மேல், சிலுவையின் மூலமாக வெளியரங்கமாகிறது.

தியானமும் ஜெபமும்

என் இளவயதின் பாவங்களும், வாலிபத்தின் பாவங்களும், முதிர் வயதின் பாவங்களும் அவருக்குள் சென்று, பல மாதிரியாக வேஷம் போட்டு என் இரட்சகரை துன்பப்படுத்தின. என் பாவங்களில் சில சவுக்குக்குள்ளும், சில மூங்கில் தடிக்குள்ளும், சில சிகப்பு அங்கிக்குள்ளும், சில உமிழ் நீருக்குள்ளும், சில முள் முடிக்குள்ளும், புகுந்து கொண்டு என் தேவாதி தேவனை அவமானப்படுத்தின.

அவருடைய பொன்னான உடலைப் புண்படுத்தின. என் அக்கிரமங்களில் சில அன்னாவாகவும், சில சேவகர்களாயும், சில யூதராகவும், சில பிலாத்துவாகவும், சில ஏரோதுவாகவும் மறுரூபப்பட்டு என் தேவனைக் கொடுமைப்படுத்தின. என் தோஷங்களில் சில ஆணியாகவும், சில சுத்தியாகவும், சில முட் கிரீடமுள்ளாகவும், சில சிலுவையாகவும் இருந்து என் இரட்சகரை பாடுகளுக்கு உட்படுத்தின. இத்தனைக்குப் பிறகும் இந்தப் படுபாவியான என் மீது இரக்கம் பாராட்டி அன்பு காட்டுகின்றீரே. உம்முடைய அன்பை நான் என்னவென்று சொல்வேன் தகப்பனே!

மகா கிருபை நிறைந்த என் தேவனே! நான் செய்த பாவங்கள் உமது சிரசின் மேல் முள்முடியாக இருக்கிறது. என் இள வயதின் பாவங்களையும், என் வாலிபத்தின் பாவங்களையும் முதிர் வயதின் பாவங்களையும் மன்னித்து உமது பாடுகளின் ஆசீர்வாதங்களை எனக்குத் தந்தருளும். சர்வ லோகமும் உமது சிலுவைப் பாடுகளால் மீட்கப்படும்படி வந்த இயேசுவே! இந்த தேசத்தை உம்மை விசுவாசிக்கும் நாடாகும்படி பரிசுத்த ஆவியானவரை அனுப்பி அருளும். அவர் அன்பில் நான் என்றும் நிலைத்திருக்க கிருபை தாரும். மரணத்தை வென்ற மன்னாதி மன்னர் இயேசுவின் திருநாமத்தில் கேட்கிறேன் ஜெபம் கேளும் ஜீவனுள்ள எங்கள் பரலோக பிதாவே! ஆமென்!

தியானம் 27

சிலுவை சுமந்த சிறப்புமிகு தேவனின் சீர்மிகு சிரசு (பாகம் 3)

முந்தைய இரண்டு அத்தியாயங்களில் இயேசு கிறிஸ்துவின் சீர்மிகு சிரசைக் குறித்து ஐந்து குறிப்புகளை தியானித்தோம். இதில் மீதியான வேறு இரண்டு குறிப்புகளை இப்போது தியானிப்போம்.

தலை சாய்க்க இடமில்லை என்று சொன்னவருக்கு கடைசியாக ஓர் இடம் கிடைத்தது. அது அவருடைய சிலுவையே.அவர் சிலுவையில் தமது தலையைச் சாய்த்துக் கொண்டு **'இயேசு காடியை வாங்கின பின்பு முடிந்தது என்று சொல்லி, தலையை சாய்த்து ஆவியை ஒப்புக் கொடுத்தார்'** என்று யோவான் 19:30ல் எழுதுகிறார். சிலுவை அவருடைய கடைசிக் கட்டுயென்று இயேசு நன்றாய் அறிந்திருந்தார் (மத் 26:2).

என் தேவனே! நீர் இப்பூலோகத்திற்கு வந்த வேலையை வெற்றிகரமாக முடித்துவிட்டீர். உலகத்தின் பாவங்கள் அனைத்தையும் நீர் சிலுவையிலே சுமந்து தீர்த்து விட்டீர்.

மரணத்தை ஜெயித்து விட்டீர். உம்மை விசுவாசித்து ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலம் பாவ விமோசனம் தந்து வீட்டீர். விடுதலை தந்து விட்டீர். இதோ எங்கள் சிலுவையை நாங்கள் தூக்கிக் கொண்டோம் தகப்பனே. இதில் எங்கள் உலகப் பிரகாரமான ஆசைகளையும் இச்சைகளையும் அறைந்து விட்டோம். உமது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாங்கள் வருகிறோம் தகப்பனே. இந்த பூலோக வாழ்வின் பாடுகளைக் கண்டோ, மரணத்தைக் கண்டோ நாங்கள் கலங்கவில்லை தேவனே! உமது மூலமாக, உமது இரட்சிப்பின் மூலமாக நாங்கள் சகலத்திலும் ஜெயம் எடுக்கிறோம் அய்யா. எங்களை வெற்றி சிறக்கப் பண்ணுவதற்காக நன்றியய்யா!

நீர் வந்த வேலையை எக்குறையுமின்றி சிறப்பாக நிறைவேற்றி விட்டீர். பிதாவின் சித்தத்தை செய்து முடித்து விட்டீர். ஆகவே பரம சந்தோஷத்தோடு முடிந்தது என்று கூறி தலை சாய்த்து விட்டீர். பரமண்டலத்திலிருக்கிற தேவ தூதர்கள் அனைவரும் உமது சிலுவையைச் சுற்றி நின்று கீதம் பாடுகிறார்கள். அந்த கீதத்தை கேட்கும்படி தலையை சாய்க்கின்றீரோ? உமது வேலை முடிந்தது. எங்களின் வேலை இனிமேல்தான் தொடங்கப் போகிறது. நீர் பட்ட பாடுகளை, உமது அவதார நோக்கத்தை, நீர் வாழ்ந்த பரிசுத்த ஜீவியத்தை, உமது உபதேசங்களை, உலகமெல்லாம் பறையறிவிக்கும் பணியை நாங்கள் செய்து முடிக்க வேண்டும்.

உலகத்தின் பாவங்களை எல்லாம் சுமந்து நீர் தீர்த்து விட்டீர். அனைவரும் உம்மிடம் இரட்சிப்பிற்காக வருகின்ற காட்சியைக் காண்கிறேன். எல்லோருமே அலங்கோலமாகத் தொங்கும் ஒரு உடலை சிலுவையிலே காண்கின்றனர். முள்முடியையும், அதன் மேல் எழுதப்பட்டுள்ள வாசகத்தையும் பார்க்கின்றனர்.

என் ஆத்துமா இவைகள் எதையுமே காணவில்லை. எனக்கு முள் கிரீடமாக அல்ல. அது ஜீவ கிரீடமாகத் தெரிகிறது. நிர்வாண தேகமாக அல்ல. அது நீதியின் நிலையங்கியாகத் தோன்றுகிறது. சிலுவை சிங்காசமானமாகத் தெரிகிறது. அந்த வாசகம் பல வர்ண

வான வில்லாக பிரகாசிக்கிறது. முற்பிதாக்கள், பரிசுத்தவான்கள், ஆசாரியர்களின் ஆவிகள் சிலுவையின் முன்னின்று இரட்சகரைப் பார்க்கின்றன. தேவ தூதர்களும், சேராபீன்களும், கேராபீன்களும் சிலுவையின் மேல் பறந்து தேவ ஆட்டுக்குட்டியானவருக்கு சகல கனமும், மகிமையும், வல்லமையும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக என்று பாடுகின்றனர்.

பரலோகத்தில் பிதாவும் இயேசு சிலுவையில் தொங்கும் கோரக் காட்சியைக் காண்கிறார். அவருடைய உடல் லேசாகத் துடிக்கிறது. கண்களை மூடிக் கொள்கிறார். அதில் முத்தாக ஒரு துளிக் கண்ணீர் திரண்டு வந்து நிற்கிறது. தான் பெற்ற ஒரே குமாரன் தன் சித்தத்தை நிறைவேற்றப் பட்ட பாடுகளையும், அனுபவித்த சித்திரவதைகள், நிந்தைகள் எல்லாவற்றையும் ஒரு நிமிடம் நினைவு கூறுகிறார். அவருடைய உடல் சிலிர்க்கிறது. அந்த சமயம் அவரின் உதடுகளில் ஒரு வெற்றிப் புன்னகை. மனுக்குலத்தின் பாவங்களை தன் ஒரே பேறான குமாரன் சுமந்து தீர்த்து சாத்தானை வென்று விட்டதை எண்ணி பெருமிதம் கொள்கிறார். கடமையை முடித்து, உயிர்த்தெழுந்து மீண்டுமாய் தன் இருப்பிடமான பரலோகத்திற்கு வரவிருக்கும் தன் குமாரனை வரவேற்க பிதாவின் உள்ளம் உவகையில் துள்ளுகிறது.

உயிர்த்தெழுந்த காட்சியை யோவான் விவரிக்கிறார் பாருங்கள்: **'சீமோன் பேதுரு... கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்ற சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே.. வைத்திருக்கிறதையும் கண்டான்'** என்று யோ 20:6,9ல் எழுதுகிறார். இயேசு அடக்கம் செய்யப்பட்டபோது அவருடைய தலை ஒரு மெல்லிய சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு உயிர்த் தெழுந்தபோது அதை அவர் அவிழ்த்து சுருட்டி ஒருமூலையில் வைத்து விட்டார். அவர் உயிர்த்தெழுந்ததின் உண்மையை நிரூபிக்கும் சாட்சியாகவும் அது இருந்தது. பூலோக புஷ்பங்களை பல வர்ண உடுப்பால் உடுத்தி அழகு பார்த்தவருக்கு அரிமத்தியா ஊர் யோசேப்பு ஒரு மெல்லிய துணியால் அவர் தலையில் கட்டினான்.

பிணங்களுக்கு சாதாரணமாகக் கட்டுகிற வழக்கப்படி அல்ல. உயிரோடு எழுந்த லாசருவின் முகம் சீலையால் சுற்றப்பட்டு இருந்தது. - (யோ 11:44) இதுதான் பொதுவாக செய்கின்ற வழக்கம். ஆனால் கிறிஸ்துவினுடைய தலையோ துணியால் சுற்றப்பட்டு இருந்தது - யோ 20:7. ஏனென்றால் கிறிஸ்து வினுடைய தலை சேவகருடைய தடி அடிகளாலும், யூதர்களுடைய குட்டுகளாலும் முள் முடியினாலும் படுகாயப்பட்டு இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.அவைகள் எல்லாவற்றையும் மறைத்து விடும்படி கிறிஸ்துவின் தலையில் துணியால் சுற்றப்பட்டது என்று எண்ணுகிறேன்.

உயிர்த்தெழுந்த நீர் உமது தலைத் துணியை அவிழ்த்து ஒரு பக்கத்திலும், உடலை மூடிய துணியை ஒரு பக்கத்திலும் சுருட்டி வைத்து விட்டு வெற்றி வேந்தராய் வெளியே வந்தீர். வெளிவந்த நீர் **'மரித்தேன், ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறேன். ஆமென்'** என்றும், **'நான் மரணத்திற்கும் பாதாளத் திற்கும் உரிய திறவுகோல்களை உடையவனாக இருக்கிறேன்'** என்று முழக்கமாய் கூறினாற் போல் என் ஆவியில் நான் உணர்கிறேன்.

சிலுவையில் சாய்ந்த தலை, கல்லறையில் கிடத்திய தலை எழுந்தது என்கிற செய்தி என் ஆத்துமாவை துள்ளப் பண்ணுகிறது. இனி நான் துக்கம் கொண்டாடுவானேன்? வியாகுலப்படுவானேன்? சிலுவையில் சாய்ந்த தலை எழுந்தது. கல்லறையில் படுத்த தலை நிமிர்ந்தது. என் பாவ நிவாரணம் நிறைவேற்றியாயிற்று. தேவனுக்கே மகிமை உண்டாவதாக! திரிலோகத் தேவனுக்கே மகிமையும் மாட்சிமையும் உண்டாவ தாக! என் மீட்பர் உயிரோடு இருக்கிறார். என் நேசர் ஜீவிக்கிறார். அவர் இனி என்னோடு எப்போதும் இருப்பார். பூலோகத்திலும் பரலோகத்திலும் இம்மையிலும், மறுமையிலும் நான் என் தேவனோடு என்றென்றைக்கும் ஜீவிப்பேன். அல்லேலுயா!

இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே இத்தனை பாடுகளை யும் பட்டது இந்த உலகத்தில் இருக்கிற கிறிஸ்தவர்களுக்காக மாத்திரமல்லை. இந்த உலகத்தில் மானிடராய்ப் பிறந்த

அனைத்து ஜாதி, மத, தேச, இன மக்களுக்காகவுமே அவர் பாடுகள் பட்டார். ஏனென்றால் உலக மக்கள் அனைவரையும் படைத்தது அவர் ஒருவரே. அனைவருக்காகவும், அனைவரின் பாவங்களுக்காகவும் மரித்தார். இதை இன்னும் அநேகம் பேர் அறியாமல் இருக்கின்றனர். அதை அறிவிக்க வேண்டியது கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரின் கடமையாக இருக்கிறது. இதை ஒருவேள்வியாக எடுத்துக் கொண்டு செய்வோமா?

தேவ சித்தத்தை நிறைவேற்றுவோமா? தேவ சித்தத்தை நிறைவேற்றும் அனைத்து கிறிஸ்தவ பிள்ளைகளோடு தேவனின் கிருபையும் வல்லமையும் அரவணைப்பும் வழிநடத்தலும் என்றென்றும் இருப்பதாக!

ஆமென்.

★

ஆசிரியர் குறித்து

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 71 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும். பின்னர் பென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத்துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன் முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப் படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவரையும், இவர் குடும்பத்தாரையும் தெரிந்து கொண்ட விதம் மற்றும் இவரின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும் 2500க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும் மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Sundar Prints 9840199777